Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 23 ஹிஜ்ரி 1427 ஐ ஆகிர் 09 (08.07.2006) சனிக்கிழமை இதழ் 280

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# விசேட செயற்திட்டத்துக்குள் கொழும்பு நகரப் பாதுகாப்பு!




கொழும்பு

கொழும்பு நகரம் நேற்று முதல் விசேட பாதுகாப்புச் செயற்திட்டம் ஒன்றின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றியன்சி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு நகரில் இடம்பெறக் கூடிய தாக்குதல்களைத் தடுப்பது, குற்றவாளிகளை இலகுவாக இனங்காணுவது போன்ற காரணங்களுக்காக நேற்று முதல் இந்த விசேட பாதுகாப்பு நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

இதன்படி கொழும்பு நகரில் குடியிருப்போரின் சகல விபரங்களும் பதிவு செய்யப்பட்டு கணனி மயப் படுத்தப்படவுள்ளது.

ஆரம்ப கட்டமாக நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் இந்தத் திட்டம் நேற்று அமுல்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குடியிருப்பாளரின் விபரங்களைச் சேகரிக்கும் வகையில் கேள்விகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணை ஆயுதக் குழுவால் 35 சிறுவர்கள் கடத்தல்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தீவுச்சேனை, கறுப்பளை, சொருவில், சேவலப்பட்டி போன்ற கிராமங்களிலிருந்து 35 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை துணை இராணுவக்குழுவினர் கடத்திச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது.


இந்தக்கடத்தல் சம்பவத்தால் மட்டக்களப்பின் பல கிராமங்களிலும் பதற்றம் நிலவுகின்ற போதும் துணை இராணுவக்குழுவினரின் மிரட்டல் மற்றும் மிருகத்தனமான கொலை அச்சுறுத்தலுக்குப் பயந்து அந்தப்பகுதி மக்கள் பொலிஸாரிடமோ அல்லது இராணுவத்தினரிடமோ முறையிடாது உள்ளனர்.

பொலிஸாரிடம் அல்லது இராணுவத்தினரிடம் முறையிட்டால் - அதே படைகளுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினர் முறையிட்டவர்களையும் கடத்திச் சென்று துன்புறுத்தவும், கொலை செய்யவும் முயற்சிப்பார்கள் என்ற அச்சம் காரணமாகவே பொதுமக்கள் பின்வாங்குவதாக அந்தப் பகுதி கிராம அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

ஜூன் மாதத்தில் மட்டும் 125 க்கும் மேற்பட்ட சிறார்கள் வலுக்கட்டாயமாக மிரட்டிக் கடத்திச் செல்லப்பட்டுள்ளதுடன், (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக கோத்தபாய நியமிக்கப்படலாம்!

### கொழும்புப் பத்திரிகை தகவல்



கொழும்பு

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை நியமிக்கத் திட்டமிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் பிரதிப் பாது

## உடன்பாட்டை மாற்றுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்

### கண்காணிப்புக்குழுத் தலைவர் பேட்டி

கொழும்பு

போர்நிறுத்த உடன்படிக்கைக்கு கட்டுப்படுவதே இப்போதைக்கு சிறந்தவழி என போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த ஓர் வழியெனவும், அதில்





கொழும்பு

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவை நியமிக்கத் திட்டமிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பில் எவரும் நியமிக்கப்படாமல் உள்ளனர். இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக தற்போது உள்ள கோத்தபாய ராஜபக்ஷவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்க மகிந்த முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் கூட்டுப் படைகளின் தளபதியாகவுள்ள எயர் சீப் மார்ஷல் டொனால்ட் பெரேராவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கும் சாத்தியங்கள் குறித்தும் மகிந்த ராஜபக்ஷ ஆராய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு (12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு


போர்நிறுத்த உடன்படிக்கைக்கு கட்டுப்படுவதே இப்போதைக்கு சிறந்தவழி என போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த ஓர் வழியெனவும், அதில் மாற்றம் செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் கொழும்பிலுள்ள இலத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

போர்நிறுத்த கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் தொடர்பாக எழுந்துள்ள கேள்வி தனக்கும் அப்பாற்பட்ட அரசியல் விவகாரம் ஆகும்.

இரண்டு தரப்பினரிடையே கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை (12 ஆம் பக்கம் பார்க்க)



# அரசாங்கம் மறுப்பு!

கொழும்பு

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்படக்கூடும் என நேற்று டெய்லி மிரர் ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது என அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்தது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் :- (12 ஆம் பக்கம் பார்க்க)

# குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!


திருகோணமலை

திருகோணமலை - கணேஸ் வீதியில் நேற்றுக் காலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனது நான்கு வயதுக் குழந்தையை பாலர் பாடசாலைக்குக் கொண்டுசென்ற வேளை இடைமறித்த கைத்துப்பாக்கிதாரிகள் இருவர் இவரைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைச் சந்திப்பதற்கு பகிரங்கமாகவே செல்வேன்

## வைகோ தெரிவிப்பு



சென்னை

விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கு தேவையேற்பட்டால் அவர்களை பகிரங்கமாகச் சந்திப்பேன். அவர்களை ஏன் ரகசியமாகச் சந்திக்கவேண்டுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்தார்.

கோவை இராமகிருஷ்ண திருமறை மண்டபத்தில் நடைபெற்ற ம.தி.மு.க செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

கேரளாவுக்கு ஆயுர்வேத சிகிச்சைக்குச் சென்று 15 நாட்கள் ஓய்வெடுத்தேன். (12 ஆம் பக்கம் பார்க்க)

# மோட்டார் தாக்குதல்

திருகோணமலை

திருகோணமலை - மூதூர் 64 ஆம் கட்டை இராணுவ முகாம் மீது நேற்று மாலை மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமாலை 6.20 மணியளவில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலின் போது இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் துப்பாக்கிச்சூடு

மன்னார்

மன்னார் - முருங்கனில் நேற்றிரவு விசேட அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து இருதரப்புக்கும் இடையே சிறிது நேரம் மோதல் ஏற்பட்டது. எனினும் எவருக்கும் காயம் ஏற்பட்டதாக தகவல் இல்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)




# ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்


'வந்திட்டான்யா வந்திட்டான்' என்று இந்தக்காலத்தில் அடிக்கடி காதில் விழுவதுபோல, இதோ மீண்டும் காதில் கேட்கிறது. ஆனால், இது அந்தக் களத்தில் அல்ல, உதைபந்தாட்டக் களத்தில். இங்கு குறிக்கப்படுபவர் ஹொராசியோ எலிசொண்டா.

போர்த்துக்கல் நாட்டுக்கு எதிராக இங்கிலாந்து ஆட்டத்தில் வெய்ன் ரூணியை எந்தவித இரக்கமும் இல்லாமல் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றியவர் இவர்தான். இவரேதான் இத்தாலி - பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மத்தியஸ்தராகக் கடமையாற்றப் போகிறார். இந்த நாற்பத்தியிரண்டு வயதேயான ஆர்ஜென்ரீன மத்தியஸ்தர் எல்லோராலும் பேசப்பட்டவர்.

அதாவது சாதகமாகவும், பாதகமாகவும் பேசப்பட்டவர். 2006 FIFA ஐ ஆரம்பித்து வைத்தவரும் இவரே. ஜேர்மனி, கோஸ்டாறிக்க அணிகள் முதலாவது ஆட்டத்தில் கலந்துகொண்டபோது அந்த ஆட்டத்தை கொண்டு நடத்தியவர் இவர்தான்.

ஒரு P.T மாஸ்ரரான இவர் 1994 இல் இருந்து தொழில்சார் மத்தியஸ்தராக இருந்தவர். (பிள்ளைகளே விளையாடுங்கோ என்று மாணவர்களை மைதானத்துக்கு அனுப்பிவிட்டு, அந்த வேளையை ஓய்வு வேளையாக மாற்றியிருக்கமாட்டாரென்று நம்பலாம்).

எலிசொண்டோ சர்ச்சை தொடர்பில் ஒரு விடயத்தைக் கூறலாம். ரூணி வெளியேற்றப்பட்டது தொடர்பில் வழக்கத்துக்கு மாறாக எல்லோரும் ஏன் துள்ளிக் குதிக்கிறார்கள் என்று புரியவில்லை.



FIFA இன் தலைவர் செப் பிளெட்டரும் ஆரம்பத்தில் ரூணியின் வெளியேற்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், TV REPLAY பார்த்தபின் மத்தியஸ்தர் எலிசொண்டோவின் தீர்ப்பு சரியென்பதை உணர்ந்துகொண்டேன் என்கிறார் அவர்.

எலிசொண்டோ 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற WORLD CLUB CHAMPIONSHIP ஆட்டங்களிலும் மத்தியஸ்தராகக் கடமையாற்றியவர். மான்செஸ்ரர் யுனைட்டட் அணிக்காக டேவிட் பெக்கம், மெக்சிக்கோவின் நிகாக்ஷா அணிக்கு எதிரான போட்டியொன்றில் விளையாடிக்கொண்டிருந்தபோது சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.


ஒலிம்பிக் 2004 போட்டிகளிலும் இவர் மத்தியஸ்தராகக் கடமையாற்றியவர். நூற்றுக்கணக்கான நாடுகளின் மத்தியஸ்தர்கள் அமைப்பைக் கொண்ட FIFA, இந்த அதியுன்னத ஆட்டத்துக்கு இந்த ஆர்ஜென்ரீன மத்தியஸ்தரைத் தெரிவு செய்திருக்கிறதென்றால் இவரது தகுதி நன்றாக விளங்கவேண்டும்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் பிரான்ஸ், இத்தாலி வீரர்களுக்குப் புரியவேண்டும். ஒழுங்காக விளையாடாவிட்டால், பதினொன்றைப் பத்தாக்க இவர் தயங்கமாட்டார். மத்தியஸ்தர் இறுக்கமானவராக இருப்பதால் கண்ணியமானதொரு ஆட்டத்தைப் பார்க்கமுடியும் என்ற நம்பிக்கையும் ரசிகர்களுக்கு ஏற்படும்.

ரசிகர்கள், மத்தியஸ்தர்களை எப்போதும் மதிப்பவர்கள். ஆகவே இவர் அணியை அவதானிக்க, நாங்கள் இவரை அவதானிப்போம். FIFA 2006 இறுதியாட்டம் இனிதாக அமையட்டும்.

# மன்னவனே அழலாமா?

ஜேர்மன் அணியின் எழுச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்தவர் மிருசுலவ் குளோஸ். தற்போதைய கோல் எண்ணிக்கையில் 2006 FIFA வில் முதல்வரும் இவரே. இவர் அதிசிறந்த வீரருக்கான விருதைப் பெறுவதைவிட, ஜேர்மனியை மூன்றாவது இடத்துக்கு கொண்டு வந்து வெண்கலப் பதக்கம் பெறுவது முக்கியம் என்று நினைக்கிறார்.



இன்று நடைபெறவிருக்கும் போர்த்துக்கல் நாட்டுக்கு எதிரான 3 ஆம், 4 ஆம் இடங்களுக்கான போட்டியில் இவர் தனது ஐந்து கோல் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடும். ஜேர்மன் அணி வீரர்களும் குளோஸ் கோல் அடிக்குமாறு சந்தர்ப்பங்களை அவரை நோக்கித் தள்ளிவிடவும் கூடும். அதிக கோல் அடித்தவர் என்ற நிலை இருப்பது சந்தோசமானதே. ஏனெனில் ஒரு விருதாவது ஜேர்மனிக்குக் கிடைக்கும் என்கிறார் இவர்.

ஆனால், எல்லோருக்குமே ஒன்று தெரியும். நான் எனக்காக விளையாடுவது இல்லை என்பதையும், அணிக்காக விளையாடுவேன் என்கிறார்.

ஜேர்மனியின் பயிற்றுனர் ஜூர்கன் கிளீன்ஸ்மன் உலகக்கிண்ண போட்டிகளில் பதினொரு கோல்கள் போட்டவர். இன்னும் இரண்டு கோல்கள் குளோஸ் ஜேர்மனி சார்பான கிளின்ஸ்மனின் பதினொரு கோல்களைத் தாண்டிவிடுவார். ஆனாலும், கால் தசைப்பிடிப்பால் அவஸ்தைப்படும் இவர் சனிக்கிழமையாடும்போது தயார் நிலைக்கு வராமல் - காலம் காலை வாரிவிடுமோ தெரியவில்லை.

எனக்கு ஜேர்மனி முதலிடம் பெற முடியவில்லை என்பது மிகுந்த வருத்தம்தான். ஆனால், நான்காவது இடத்தைவிட, மூன்றாவது இடம் மேலானது என்கிறார்.

ஒரு யதார்த்தத்தை அழகாக் கூறுகிறார் குளோஸ் .தோற்றவுடன் இருந்த வேதனையை விட, நாளாக நாளாக வேதனை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. யோசனைகள் அதிகரிக்க, அதிகரிக்க வேதனையும் கூடுகிறது, நிறைந்த கசப்பாகவே இருக்கிறது. இதெல்லாம் எப்படி நடந்து முடிந்தது என்று புரியவேயில்லை என்று துக்கப்படுகிறார் குளோஸ்.

## இன்றைய ஆட்டம்

**3 ஆம் இடத்துக்கான ஆட்டம்**

**போர்த்துக்கல் - ஜேர்மனி (ஸ்ருட்கார்ட் 12.30)**

# நியாயம் இருக்கிறது



பிரான்சிய பயிற்றுனர் டொமொனேஷ். அவர் அடக்கமாகவே இருக்கிறார். இன்னும் ஒரேயொரு படியைத் தாண்டவேண்டும் என்கிறார். விமர்சகர்கள் 'முதிர் அணி' என்று கேலி செய்த பிரான்ஸ் அணியில் இளமை ஊஞ்சலாடுகிறது. அது 9 ஆம் திகதி புயலாக மாறும்.

வெற்றியின் பின் கருத்துக் கூறிய டொமொனேஷ், இது நின்று யோசிக்கும் நேரமல்ல. நாங்கள் இத்துடன் திருப்தி கொள்ளமுடியாது. நிறைய வேலை இருக்கிறது என்றார். எம்மிடம் உள்ள சகலதையும் ஒன்று திரட்டி இறுதிப்போட்டியில் செலுத்தவேண்டுமென்கிறார் இவர். இவருக்கு 34 வயதாகும் சிடேன் மீது அபார நம்பிக்கை இருக்கிறது.

சிடேனின் திறமையைப் பாராட்டும் இன்னொரு வீரரான 34 வயதாகும் துராம் இறுதிப்போட்டியில் கலந்து கொள்வது என்பதே ஒரு கனவு நனவாகிறது என்பது போலத்தான் என்று கூறி - தான் பத்து வயதுச் சிறுவனாக இருப்பதுபோல உணர்கிறேன் என்கிறார்.

தியரி ஹென்றி தன் பங்குக்கு நாங்கள் சிலிர்த்தெழும் சிறுவர்களாகத்தான் விளையாடினோம். எமது முன்கள, பின்கள வீரர்களின் விளையாட்டைப் பார்த்தால் எத்தனை நுட்பங்களைப் பயன்படுத்தினோம் என்பது விளங்கும் என்கிறார்.

இவர்கள் எல்லோரும் சந்தோசமடைய நிறைய நியாமிருக்கிறது. பெரிதாகக் கண்டுகொள்ளப்படாத ஒரு அணி எங்கே வந்து நிற்கிறார்கள் என்று பார்த்தால் அந்தச் சந்தோசத்தில் நியாயம் இருப்பதும் புரியும்.



தென்னாபிரிக்காவில் 2010 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கான இலச்சினையும், வெற்றிக்கிண்ணமும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டபோது.

# சமமானவர்களில் முதல்வன் யார்?



உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகளில் மிகச்சிறந்த உதைபந்தாட்ட வீரர் யாராக இருக்கக்கூடும் (MOST VALUABLE PLAYER). பலருடைய பெயர்கள் தற்போது அடிபட்டாலும், பிரான்ஸ் அணித்தலைவர் சினேடின் சிடேனின் பெயர் பலமாக அடிபடுகிறது.


இந்தத் தெரிவில் வழங்கப்படும் (GOLDEN BALL) தங்கப்பந்து இவருக்குக் கிடைக்கும் என்பது அனேகருடைய எதிர்பார்ப்பு இவர் ஞாயிறன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்துடன் தனது சர்வதேச உதைபந்து வாழ்க்கையை முடித்துக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

ஜேர்மனியின் உலகக்கிண்ண ஏற்பாட்டுக்குழுத் தலைவர் பெக்கன்பேர் கருத்துக் கூறும்போது-

மிகச்சிறந்த வீரர்கள் களத்தில் நிற்கிறார்கள். தெரிவு இலகுவானதாக இருக்கப்போவதில்லை என்று கூறியிருக்கிறார். எல்லாமே பிரபல்யமான பெயர்கள். எல்லாமே ஜொலிக்கும் நட்சத்திரங்கள். இதில் தெரிவு எவ்வாறு அமையும். சிலவேளைகளில், நிறைந்த அனுபவமும், முதிர்ச்சியும் கொண்டவர் இந்த விருதைத் தட்டிச் செல்லக்கூடும்.

சிடேன், தியரி ஹென்றி மற்றும் போர்த்துக்கல் அணியின் தலைவர் பிகோவாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு ஒன்றைக் குறிப்பிடவேண்டும். 1998 இல் பிரான்ஸ் - பிரேசில் அணிகள் இறுதியாட்டத்தில் கலந்துகொண்டன. பிரேசிலின் றொனால்டோ அதிசிறந்த வீரராக இந்த வருடத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

2002 இல் ஜேர்மன் அணியின் கோல் காப்பாளர் ஒலிவர் கான் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார். 2006 ஆம் வருட விருது 10 ஆம் திகதி காலையில் தெரியப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



இம்முறை களத்திலுள்ள நட்சத்திரங்கள்-

| | |
|---|---|
| பேபியோ கனவாரோ | (இத்தாலி) |
| மனிஷ் | (போர்த்துக்கல்) |
| மைக்கல் பலக் | (ஜேர்மனி) |
| அன்ரியா பிர்லோ | (இத்தாலி) |
| ஜம்பரோட்டா | (இத்தாலி) |
| தியரி ஹென்றி | (பிரான்ஸ்) |
| கியான்லூகி புவொன் | (இத்தாலி) |
| பட்ரிக் வியரா | (பிரான்ஸ்) |
| மிருஸ்லவ் குளோஸ் | (ஜேர்மனி) |
| சினேடின் சிடேன் | (பிரான்ஸ்) |


# சினிமாவா காட்டுகிறார்கள்

மீண்டும் கெய்சர் பெக்கன்பேர் பேசுகிறார். இவர் இம்முறை மைதான நடிகர்கள் பற்றிப் பேசுகிறார். இந்தப்பந்தியில் ஏலவே இது பற்றிப் பேசப்பட்டாலும் 'கெய்ஸர்' பேசுவது போல வருமா?

தமது வாய்ப்பை மற்ற வீரர் கெடுத்து விட்டதுபோல நடந்துகாட்டுபவர்களையும், கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம் என்று மத்தியஸ்தரிடம் அனுதாபம்பெற வேகமாகப் பாய்ந்து விழுந்து நடிப்பவர்களையும், அடிவிழுந்ததோ இல்லையோ பயங்கர வேதனை போலப் பாவலா பண்ணி மத்தியஸ்தரிடம் அனுதாபம் பெற முயலும் வீரர்களையும் சரியாக இனங்கண்டு, இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிறார் இவர்.

சம்பவம் நடைபெறும் சந்தர்ப்பத்தை தலைகீழாக்கி, ஏதும் குற்றம் புரியாத எதிரணி வீரரைக் குற்றவாளியாக்கும் நிலைமை அசிங்கமானது என்கிறார் அவர்.

சுற்றுப் போட்டியின் ஆரம்பத்தில் மத்தியஸ்தர்கள் சற்று அதிகமாகவே மஞ்சள் அட்டை காட்டுகிறார்களோ என்று எனக்குக்கூடச் சந்தேகமாகத்தான் இருந்தது. ஆனால், சுற்றுப் போட்டியின் போக்கில் அவதானித்தபோது வீரர்களின் நடிப்பு கூடிப்போய் விட்டதை என்னால் உணரமுடிந்தது.



வேதனையின் உச்சத்தைக் காட்ட மைதானத்தில் நீண்டநேரம் விழுந்துகிடந்ததெல்லாம் அனுதாபத்தைப் பெறுவதற்குப் பதிலாக, வெறுப்பைத்தான் ஏற்படுத்தியது என்கிறார்.

இப்பொழுது ஒரு சரியான சந்தர்ப்பத்தில் நேர்கோட்டில் வீரர்கள் மத்தியஸ்தர்கள், பயிற்றுனர்கள், நிர்வாகிகள் எல்லோரும் சந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தச் சுற்றுப் போட்டியின்பின் எல்லோரும் கூடியிருந்து கலந்துரையாடி சில தீர்வுகளைக் காணவேண்டுமென்கிறார் கெய்சர் பெக்கன்பேர்.

இன்னொரு வீரருக்கு அட்டை காட்டு என்று மத்தியஸ்தரிடம் முறையிடும் குறிப்பிட்ட வீரருக்கு முதலில் மஞ்சள் அட்டை காட்ட வேண்டும் என்று சீறுகிறார் முன்னாள் உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனியின் அணித்தலைவர்.

இவரது மொழியிலேயே சுருக்கமாக ஆனால், சாட்டையடியாகக் கூறுவது இங்கு நன்கு பொருந்தும். This is Unsporting and Unfair. எனவே, 2010 இல் தென்ஆபிரிக்காவில் உண்மையாகவே அடிவாங்கியவர்கூட பயத்தில் நொண்டி நொண்டி விளையாடும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

## பொன்சேகா மீதான தாக்குதலுடன் தொடர்புடைய ஆறு பேர் கைது!

கொழும்பு

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மீது தாக்குதல் நடத்திய பெண்ணுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 6 நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை வெள்ளவத்தை பிரதேசத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்ட 6 பேரும் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் மற்றுமொரு குழு தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இராணுவத்தளபதி மீது தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரி ஏற்படுத்திய தொலைபேசி அழைப்புகள் தொடர்பான தகவல் கிடைத்துள்ளதாகவும் தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தியவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மங்கள சமரவீர சீனா பயணம்



கொழும்பு

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் லிசயோக்சிங் விடுத்துள்ள அழைப்பை ஏற்று எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை சீனாவுக்கு பயணம் மேற்கொள்வதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜியாங் கடந்த வியாழக் கிழமை தெரிவித்தார்.

## வாகனங்களை கொள்ளையிட்ட இராணுவக் கப்டன் கைது!

கொழும்பு

சொகுசு வாகனங்களைக் கடத்திச் சென்று விற்பனை செய்து வந்த இராணு வக் கப்டன் தலைமையிலான கொள்ளைக் கும்பல் ஒன்று பொலிஸாரிடம் சிக்கியது.

பத்தரமுல்ல, கேகாலை, திஸ்ஸமகராம, இரத்மலானை ஆகிய பிரதேசங்களிலிருந்து இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். 6 பேரைக் கொண்ட இந்தக் கொள்ளைக் கும்பலுடன் வங்கி அதிகாரி ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கும்பலால் கொள்ளை யிடப்பட்ட 2 கோடி ரூபாவுக்கு அதிக பெறுமதி வாய்ந்த பிராடோ ஜீப், கார் மற்றும் வான் ஆகியன பொலிஸாரால் கண்டுபிடிக் கப்பட்டன. கைப்பற்றப்பட்ட 3 வாகனங்களும் வடக்கு- கிழக்கில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும், பிராடோ ஜீப் வவுனியாவில் கைப்பற் றப்பட்டதாகவும் குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைக் கும்பலுக்கு தலைமை தாங்கும் இராணுவக் கப்டன் கடைசியாக குருவிட்ட இராணுவ முகாமில் பணியாற்றியுள்ளார். இராணுவத்தை விட்டு தப்பியோடிய இந்த இராணுவக் கப்டன் கொழும்பு, வெள்ளவத்தைப் பிரதேசங் களில் வாகனங்களை கொள்ளையிட்டு விற்பனை செய்திருப்பதாக விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது.

## உரிமைக்காக போராடும் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும்!

### எல்லாவெல மேதானந்த தேரர்



கொழும்பு

தாயக உரிமைக்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கவேண்டும் என ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர்களுக்கு என்று ஓர் தனித் தாயகம் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கிடையாது. விடுதலைப் புலிகளை அழிக்க நாட்டினுள்ள புலனாய்வுத் துறையினரை ஒன்றாக இணைக்கவேண்டும்.

- அரசாங்கம் சமாதானத்தை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு இருப்பதை விடுத்து விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யுத்தத்துக்குள் அரசை தூண்டிவிடுகிறது ஜே.வி.பி!

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் விடுதலைப் புலிகள் இல்லை ஜே.வி.பியினர்தான் என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் பத்திரன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

விமல் வீரவன்ச - அரசாங்கத்தைத் தூண்டி யுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகிறார்.

கொழும்பில் செய்தி வழங்கும் சில ஊடகங்களின் விமர்சனங்க ளைத் தாங்கிக்கொள்ள முடியாத ஜே. வி.பி. யினர், அவற்றை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஊடகங்கள் என பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றனர்.

பொய்யான வதந்திகளைப் பரப்பி, பாடசாலைகளை மூடச்செய்து அரசியல் நடத்தியவர்கள் ஜே.வி.பியினர் தான். அவர்களால் எப்படி நாட்டை பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனை வழங்க முடியும்.

விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என இனவாதக் கட்சிகள் கூறுவது - அது சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கிறது எனத் தெரிவித்தார்.

## அரசாங்கம் அமைதியை விரும்பினால் தமிழர் படுகொலையை நிறுத்தட்டும்!

### சிவாஜிலிங்கம் எம்.பி.தெரிவிப்பு



கொழும்பு

தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டால், பதிலுக்கு இராணுவத்தினர் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் ம.க.சிவாஜிலிங்கம் பேசியதாவது-

தமிழ் மக்களை இராணுவத்தினர் படுகொலை செய்து வருகின்றனர். அவிசாவளையில் கடந்த ஏப்ரல் மாதம் தமிழர்கள் தலை துண்டிக்கப்படட்ட சம்பவத்தில் தொடர்புடையோரை அறிந்திருந்தமையால் சிங்கள ஊடகவியலாளர் லக்மல் சம்பத் கொல்லப்பட்டார்.

தமிழ் மக்கள் அமைதியையே வேண்டுகின்றனர். யுத்தத்தை அல்ல. நீங்கள் அமைதியை விரும்பினால் தமிழ்மக்கள் படுகொலையை நிறுத்துங்கள்.

இராணுவத்தினரால் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படும்போது, பதிலுக்கு இராணுவத்தினர் கொல்லப்படுவதும் தவிர்க்க முடியாதது.

தமிழ் மக்களை ஒடுக்குவதற்கே அவசரகாலச் சட்டம் பயன்படுகிறதே தவிர, தமிழ் மக்களைப் பாதுகாக்க அல்ல.

அரசாங்கம் பாகிஸ்தானிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறது. மறுபுறம் தமிழக மக்களினதும், எமது மக்களினதும் தொப்புள் கொடி உறவு பலமடைந்து தமிழக மக்களின் எமக்கான ஆதரவு பெருகி வருகிறது.

எமது வெற்றிக்கொடிக்கான வாய்ப்புகளை அரசாங்கம் செய்து வருகிறது. அரசாங்கம் உண்மையில் சமாதானம் மீது ஆர்வம் காட்டினால் கூலிப்படைகளின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். அதன் பின்னர் படையினரைக் கொல்ல வேண்டாம் என்று புலிகளிடம் கோருகிறோம்.

தமிழீழம் உருவானால் கொழும்புத் தமிழ் மக்கள் அங்கு சென்றுவிட வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். ஆனால், நாங்கள் ஒன்றைக் கூறுகின்றோம். சுதந்திர தமிழீழம் உருவானால் அங்குள்ள சிங்கள மக்கள் சம உரிமையுடன் வாழ வழிவகை செய்யப்படும் என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

அரச பயங்கரவாதம் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று பார்ப்பதில்லை. அரசாங்கம் துணைப்படைகளை ஏவி அப்பாவி தமிழ் மக்களைக் கொலை செய்கிறது. அதனால் படையினர் பலியாகும் துர்ப்பாக்கிய நிகழ்வு இடம்பெறுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## மின்சார சபை மறுசீரமைப்புக்கு நீதிமன்றின் கருத்து அவசியமில்லை

### சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு

மின்சாரசபையை மறுசீரமைக்கும் யோசனை தொடர்பாக உயர்நீதிமன்றின் கருத்து அவசியம் இல்லையென உயர் நீதிமன்றத்துக்குச் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதனால் குறித்த சட்டமூலம் பற்றிய உயர்நீதிமன்றத்தின் கருத்து தற்போதைக்குத் தேவைப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட இந்த இரு சட்ட மூலங்களும் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா என ஆராய்ந்து தீர்ப்பளிக்குமாறு கோரி, ஜனாதிபதி மகிந்தவால் இவ்விரு சட்டமூலங்களும் உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

தலைமை நீதிபதி சரத் என் சில்வா, சிராணி திலகவர்த்தன மற்றும் சலிம் மர்சூக் ஆகிய மூன்று நீதிபதிகளால் இந்த சட்டமூலங்கள் ஆராயப்பட்டன.

இது தொடர்பான முடிவை ஜனாதிபதி மகிந்தவுக்கும், நாடாளுமன்ற சபாநாயகருக்கும் தெரியப்படுத்தவதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி மகிந்த இரட்டைவேடம்

### ஐ.தே.கட்சியும் குற்றச்சாட்டு



கொழும்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மகிந்த ராஜபக்ஷ இரட்டை வேடமிடுவதாகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பேசியதாவது -

மகிந்தவின் சார்பாக அஜித் நிவார்ட் கப்ரல் மற்றும் சச்சின் வாஸ் குணவர்த்தன இருவரும் அயர்லாந்து சென்று மக்கின்னஸை சந்தித்து வன்னிக்கு அழைத்துள்ளனர்.

இதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றிருந்தால் விடுதலைப் புலிகளுக்கு அரசாங்க நிலை அங்கீகாரம் அளிக்கப்பட்டு விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும்.

ஆனால், மக்கின்னஸ் பயணம் குறித்து எவரும் விமர்சனம் செய்யவில்லை. இராணுவ ஹெலியில் கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துள்ளார்.

அரசாங்கத்தின் ஆதரவுடன் பயணம் மேற்கொண்ட மக்கின்னஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான ஐரோப்பியத் தடையை விமர்சனம் செய்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மகிந்த ராஜபக்ஷ இரட்டை வேடமிடுகிறார்.

தேர்தல் காலத்தில் ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காண்பேன் என்று கூறி வந்த மகிந்த ராஜபக்ஷ இந்தியத் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் இந்திய சமஷ்டி மாதிரியைப் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வாகத் தெளிவாக வரைவை மகிந்த ராஜபக்ஷ முன்வைக்க வேண்டும். அத்தகைய தெளிவான வரைவு முன்வைக்கப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவை வழங்கும்.

கருணா குழு விடயத்திலும் மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு விமர்சனத்துக்குரியது. பிரபாகரன் பேச்சுக்களுக்கு வந்தால், கருணா குழுவினரது ஆயுதங்களைக் களையத் தயார் என்று ஊடகமொன்றின் ஆசிரியருக்கு மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஆனால், இந்தியத் தொலைக்காட்சி நேர்காணலில் யார் கருணா? என்று மகிந்த கேள்வி எழுப்பியுள்ளார்.

போர் நிறுத்தத்தை அரசாங்கம் வலுப்படுத்தப் போகிறதா? அல்லது அதற்காக கண்ணீர் வடிக்கப் போகிறதா? என்பதுதான் அரசாங்கத்தின் முன் உள்ள இரு வாய்ப்புக்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சியை எப்போதும் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பது அர்த்தமற்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறைக்காவலரின் தாக்குதலில் காயமுற்ற கைதி மரணம்!

கொழும்பு

இரத்தினபுரியில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சிறை அதிகாரிகள் சித்திரவதை செய்தமையால் மரணமடைந்தார்.

வெடிகுண்டுப் பீதி தொடர்பாக புறக்கோட்டையைச் சேர்ந்த எம்.எஸ்.எப்.பெரேரா மற்றும் காமினி முனவீர ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இருவரையும் தவறாகக் கைது செய்துவிட்டதாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்ததையடுத்து இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இரத்தினபுரி நீதிமன்றில் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே குருவிட்ட சிறைச்சாலையில் மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டதாகக் காமினி முனவீர நீதிமன்றில் தெரிவித்தார்

ஏழு சிறைக் காவலர்கள் இருநாட்களாகத் தங்களைச் சித்திரவதை செய்ததாகவும், எந்தவித மருத்துவ சிகிச்சையும் தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தனர்.

இரத்தினபுரி நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை இருவரையும் விடுவித்தது. இதைத் தொடர்ந்து இருவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விடுதலையான எம்.எஸ்.எப். பெரேரா (வயது 55) சுயநினைவிழந்த நிலையில் தலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனின்றிக் கடந்த வியாழக்கிழமை இரவு அவர் உயிரிழந்தார்.

## கனேடிய தூதரக அதிகாரி மன்னாருக்கு விஜயம்

கொழும்பு

இலங்கைக்கான கனேடிய தூதரக அரசியல் விவகார செயலாளர் கிறிஸ்டினா பிரிபொண்டெய்னி மன்னார் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கத்தைச் சந்தித்த கிறிஸ்டினா - மன்னார் பிரதேச செயலக அதிகாரிகளிடம் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அண்மைக்காலமாக மன்னாரில் மீன்பிடித்தொழிலில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாகச் கிறிஸ்டினாவிடம் மன்னார் அரச அதிபர் விளக்கினார்.

இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மன்னார் பகுதி உறுப்பினர்களையும் கிறிஸ்டினா சந்தித்துப்பேசினார்.

மேலும், தலைமன்னார் பகுதிக்குச்சென்று பார்வையிட்ட இவர் - மீனவர்களுடனும் கலந்துரையாடினார். அதன் பின்னர் பேசாலை விக்டோரியா தேவாலயத்துக்குச் சென்று வின்சென்ட் பற்றிக் அடிகளாரைச் சந்தித்தார். (மோ)

## புலிகளுடன் தொடர்புடைய சிங்களப் பெண் கைது

கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் எனத் தெரிவித்து வெலிகந்தையில் சிங்களப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வெலிகந்தையைச் சேர்ந்த 28 வயதான அந்தப் பெண் தமிழ் இளைஞரைத் திருமணம் செய்து அமெரிக்காவில் வசித்து வந்தார். இலங்கைக்குத் திரும்பி தனது பெற்றோருக்குச் சொந்தமான நாவல வீதியில் உள்ள வீட்டில் தங்கியிருந்தார்.

அவரது கணவர், பெற்றோர் மற்றும் சகோதரர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

அவரைப் பொலிஸார் விசாரித்த போது, கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட புலிகளின் தலைவர்களைச் சந்தித்ததாகக் கூறியுள்ளார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், கிளிநொச்சியில் தடையின்றி நுழைவதற்கான தமிழ்ச்செல்வன் கொடுத்த கடிதம் ஒன்றையும் கைப்பற்றியிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர் என்று கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து சேலம் நகரத்தில் பரவலாக சுவரொட்டிகள்

### கியூ பிரிவு பொலிஸார் விசாரணை

சேலம்

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு திரட்டியும், ஈழவிடுதலைப் போரை ஆதரித்தும் சேலத்தின் பல இடங்களில் மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தினர் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். இது தொடர்பாக கியூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

'ஈழப்பிரச்சினைக்குத் தீர்வு, ஈழத் தமிழரிடையே வாக்கெடுப்பே' என்ற தலைப்பில் பேச்சுவார்த்தை என்ற பெயரால் இலங்கை மக்கள் மீது புதிய கொலனி ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கவும் ஏகாதிபத்தியம் செய்யும் சதிகளை முறியடிப்போம்.


விஸ்தரிப்புவாத இந்திய அரசே ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அதன் அடிவருடிகளுக்கும் இலங்கை அரசுக்கும் துணை போகாதே. விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கு. தமிழ் விடுதலைப்போரை ஆதரிப்போம். மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை வெல்க. மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம். தமிழ்நாடு என அந்தச் சுவரொட்டியில் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

அந்தச் சுவரொட்டிகள் குறித்து கியூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். சேலம் முழுவதும் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படுபவர்கள் குறித்து உளவுத் துறைப் பொலிஸார் இரகசிய விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.




## விடுதலைப் புலிகள் விடயத்தில் அரசு இரட்டை வேடம் போடுகிறது

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு

விடுதலைப் புலிகளை அணுகுவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரட்டை வேடமிடுவதாக ஜே.வி.பி கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பின் மீது நடைபெற்ற விவாதத்தில் ஜே.வி.பி நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச பேசியதாவது -

புலிகளுடனான கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் எந்த ஒரு தீர்வும் காணப்பட முடியாது. புலிகளுடனான அதிகாரப்பகிர்வு குறித்து அரசாங்கம் விவாதித்து வருகிறது.

அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பையும், பயன்படுத்தி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கவே மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். விடுதலைப் புலிகள் விடயத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை மேற்கொள்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையை ஒரு பக்கம் மேற்கொண்டு, மறுபக்கம் அதிகாரப் பகிர்வு யோசனையையும் முன்வைக்கிறது. இது இழவு வீட்டில் உட்கார்ந்து கொண்டு சீட்டு விளையாடுவது போல் உள்ளது.

அயர்லாந்தின் விடுதலை அமைப்பான ஐ.ஆர்.ஏயின் பிரதிநிதி மார்ட்டின் மக்கின்னஸ் இந்த நாட்டுக்குச் சுற்றுலா விசாவில்தான் வந்தார். அவர் வட அயர்லாந்தின் கல்வி அமைச்சரும் ஆவார். அவர் ஹெலியில் கிளிநொச்சி சென்று, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்தார்.

மார்ட்டின் மக்கின்னஸுக்கு மகிந்த விருந்தும் அளித்தார். ஆனால், மக்கின்னஸ் பயணத்தினூடான அமைதி முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன. நாட்டைவிட்டு வெளியேறும் போது, புலிகள் மீதான ஐரோப்பியத் தடையானது பாரிய தவறு என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

காஷ்மீர் தீவிரவாதிகளை தோற்கடிக்க இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையும் அரசாங்கம் தடை செய்ய வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களை சில தனியார் தொலைக்காட்சிகள் நேர்காணல் எடுப்பதைத் தடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் நிறை குறைந்தவர்களாக முப்பது சதவீத குழந்தைகள் பிறக்கின்றன

### உலக வங்கி கவலை தெரிவிப்பு

கொழும்பு

இலங்கையில் 30 சதவீத குழந்தைகள் நிறைகுறைந்தவர்களாக பிறக்கின்றன என்று உலக வங்கி கவலை தெரிவித்துள்ளது.

'இலங்கையில் போஷாக்கு நேற்றைய நிலைமையும் நாளைய மாற்றமும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உலக வங்கி சார்பில் உணவுத் திட்ட சிறப்பு அதிகாரி மீரா சேகர் கூறியதாவது-

இலங்கையின் ஊவா, மத்தியு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 40 வீதமான குழந்தைகள் போஷாக்கின்றி உள்ளனர். 2015 ஆம் ஆண்டு வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற இலக்கை இலங்கையால் எட்ட முடியாது. 30 வீத இலங்கைக் குழந்தைகள் நிறை குறைவாகப் பிறக்கின்றன.

அரசாங்கத்தின் போஷாக்கு உணவு தொடர்பான திட்டங்கள் ஏன் பயன்படவில்லை. இலங்கை நிலைமைகள் தொடர்பான உலகவங்கியின் ஆய்வு சில மாதங்களில் முடிவடைந்துவிடும் எனத் தெரிவித்தார்

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுக்கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

solidar INGO Consortium
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Schweizerisches Arbeiterhilfswerk SAH
Norwegian People's Aid

VACANCY

The Solidar Group, an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB Sri Lanka, is implementing a comprehensive Post-Tsunami Reconstruction & Rehabilitation Programme in the district of Jaffna and Kilinochchi. SAH/Solidar is currently looking for a

COMMUNITY DEVELOPMENT OFFICER WITH BACKGROUND IN AGRICULTURE AND NATURAL RESOURCE MANAGEMENT

The Community Development Officer will work under the direct supervision of the Project Manager for the Agriculture Sector Projects, which comprise Home Garden Development, Establishment of Greenbelt and support of other agriculture development activities, such as preparing and conducting training courses.

*His/Her tasks will be:*

- Day-to-day liaison with and awareness raising of beneficiaries.
- Support of community/village-based groups and partner organizations during project implementation, training courses.
- Assisting with the preparation and conducting of surveys, training courses and follow-up of with beneficiaries.
- Assisting with monitoring of and reporting on project progress.
- Establishing and maintaining contacts with government authorities and local NGOs/INGOs.

*Candidates must have*

- Diploma degree in Agriculture.
- Solid background in organic farming and IPM practices.
- He/she should demonstrate excellent communication skills with beneficiaries and experience of working with local communities in the North-East.
- Must be fluent in Tamil.

Application by female candidates is encouraged. The ability to communicate in English is seen as an advantage.

*Duty Station:* Kilinochchi

*Please send your CV and application letter 24th July, 2006 to:*
Ms.G. Piratheepa, SAH Administration
SAH /Solidar
156 Jaffna Road
Paranthan - Kilinochchi

(C-5444)

மனோகரா
யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
வடிவேல், தேஜாஸ்ரீ, மனோரமா, நாசர் மற்றும் பலர் நடித்த

இம்சை அரசன் 23ம் புலிகேசி
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2006

ஆசிரியர் :- த.அம்பிகைபாகன்




## பகுதி - I

**கீழே காணப்படும் ஒவ்வொரு வினாக்களுக்கும் பொருத்தமான மிகச் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1.பின்வரும் பிராணிகளில் மிகப் பெரிய உடம்பைக் கொண்ட பிராணி எது?
1.எருது 2.ஆடு 3.நாய் 4.குரங்கு

2.கொத்துக்கொத்தாய் பூக்காத தாவரம் எது?
1.மல்லிகை 2.மா 3.செம்புக்கம்பிப்பூ 4.செவ்வரத்தை

3.பல்வேறு இனங்களைக் கொண்ட பலவர்ண இலைகளையுடைய மிக அலங்கார மான ஒரு தாவரம் எது?
1.பலா 2.தென்னை 3.குரோட்டன் 4.செவ்வரத்தை

4.ஒருவரின் சாதாரண உடல் வெப்பநிலை யாது?
1.23° C 2. 38°F 3.98.4°F 4.28.6°F

5.பின்வரும் பிராணிகளுள் மிகச் சாதுவான பிராணி யாது?
1.சிங்கம் 2.ஆடு 3.முயல் 4.யானை

6.ஆடையிற் படிந்த தார்க்கறையைக் கழுவி நீக்குவதற்கு உகந்தது எது?
1.மதுசாரம் 2.மண்ணெய் 3.எலுமிச்சம்பழச்சாறு 4.சவர்க்காரம்

7.தாய்ப்பூனை குட்டியை வாயால் தூக்கிச் செல்லக் கௌவுவது குட்டியின் பின்வரு வனவற்றில் ஒன்று?
1.கழுத்து 2.காதுகள் 3.வயிறு 4.கால்கள்

8.பிளவுபட அகன்ற பெரிய இலையையுடைய ஒரு வித்திலைத் தாவரம் எது?
1.கமுகு 2.பனை 3.தென்னை 4.வாழை

9. சமாதானத்துக்கு பயன்படும் இலை யாது?
1.அந்தூரியம் 2.ஒலிவ்இலை 3 .வாழையிலை 4.வெற்றிலை

10.இது நன்றி உள்ளது, இது ஒரு முலையூட்டி, வேட்டைக்குப்பயன்படும் காவல்காரன் அது?
1.புலி 2.மாடு 3.நாய் 4.நரி

**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1. நல்ல பிள்ளைகள் பெரியோர் கூறும் கீழ்ப்படிவான அறிவுரைகளைப் பின்பற்றுவர்
2. கீழ்ப்படிவுள்ள பிள்ளைகள் பெரியோர் கூறும் நல்ல அறிவுரைகளைப் பின்பற்று வர்
3. கீழ்ப்படிவுள்ள பெரியோர் கூறும் அறிவுரைகளை நல்ல பிள்ளைகள் பின்பற்றுவர்.


12. ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பர் இதற்குரிய காரணமாக இருக்கக் கூடியது?
1.எதிர்காலத்தில் பிள்ளைகள் சிறந்த பிரஜைகளாக மாற வேண்டும் என்பதற்காக
2.ஆசிரியர்கள் மாணவர்களுடன் வஞ்சனையைத் தீர்த்துக்கொள்வதற்காக.
3.பிள்ளைகளைத் தண்டிக்கும் போது ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பத னால்.

**ஒரு பிள்ளை தமிழ்ப் பாடத்தை விட ஆங்கில மொழிப்பாடத்தில் கூடிய புள்ளி பெற்றது. அப்பிள்ளை கணிதபாடத்தில் பெற்ற புள்ளி தமிழ் மொழியில் பெற்ற புள்ளியிலும் குறைவாகும்**

13. அப்பிள்ளை கணித பாடத்தில் பெற்ற புள்ளி 50 எனின் அப்பிள்ளை ஆங்கில மொழிக்குப் பெற்ற புள்ளியாக இருக்கக்கூடியது.
1. 50 2.36 3.65 4.20

14.மேலே வினாவின்படி நீர் தெரிவு செய்தவிடைக்கு ஏற்ப அப்பிள்ளை தமிழ்மொழி யில்பெற்றபுள்ளியாக அமையக்கூடியது.
1.50 2.36 3.60 4.75

15.கீழே உள்ள உருக்களில் காணப்படும் முறையில் A,B என இரு குவியல்களில் கட்டைகள் உள்ளன. அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்து வைத்தால் மிகக் கூடிய நீளம் காட்டுவது A குவியலா அல்லது B குவியலா என்பதை அறிந்து அதன் சரியான விடையை அடைப்பினுள் எழுதுக.




**தரப்பட்ட இலக்க வரிசையை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16, | 10, | 11, | 15, | 30, | 12, | 33, | 26, | 20, | 25, | 27, |


16. கூட்டில் உள்ள ஒற்றை எண்களைச் சுற்றி வட்டம் இடுக? ........................


17. கூட்டில் உள்ள எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக?..............

18. முதல் உள்ள எண்ணையும், கடைசி எண்ணையும் கூட்டி எழுதுக? .............

19. இரண்டாவது எண்ணை மூன்றாவது எண்ணினால் பெருக்கி எழுதுக?............

20. கூட்டில் உள்ள எண்களை 5 ஆல் பிரிக்கும் போது மிச்சம் இல்லாது பிரியக்கூடிய எண்கள் எவை?..........................................................

21. 
இவ்வுருவில் இருந்து வெட்டி எடுக்கத்தக்கமுக்கோண உருக்களின் எண்ணிக்கை யாது?
..........................................................


22. 
இவ்வுருவில் நிழற்றப்படாத உருவை பின்னத்தில் தருக. சரியான விடையின் கீழ் கோடிடுக.
1. 4/8 2.3/7 3. 3/8 4.5/8


23. XIX +VII இந்த உரோம எண்ணை எண் குறியில் எழுதுக.


24. ஒரு காய்கறித்தோட்டத்தில் ஒன்றுவிட்ட ஒன்றாக வெண்டிச்செடியும் கத்தரிச் செடியும் நடப்பட்டுள்ளன. முதலில் வெண்டிச்செடி நாட்டப்பட்ட தக்காளித் தோட்டத்தில் 35 செடிகள் இருந்தால் அவற்றில் வெண்டிச்செடிகள் எத்தனை?


25. காந்தனிடம் ரூபா 50 உள்ளது. சுதனிடம் உள்ள பணத்தின் 6 மடங்கிலும்ரூபா 20 குறைவாக உள்ளது இருவரிடமும் மொத்தமாக உள்ள பணம் எவ்வளவு?


**பின்வரும் ஒவ்வொரு எழுத்திற்கும் முன்னால் இருக்கும் குறியீட்டை அவதானிக்க**




26.  =.............. ...............

27.  =..............................

28.  =..............................

29.  =..............................

30.  =..............................


**ஒவ்வொரு வினாக்களிலும் ஆரம்பம் முதல் இறுதி வரையான 5 நிலை களைப் படிமுறையில் காட்டும் ஒரு விடை உள்ளது. அச்சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

31. 1. விதை → செடி → மரம் → காய் → பூ
2. செடி → மரம் → விதை → பூ → காய்
3. விதை → செடி → மரம் → பூ → காய்

32. 1. சிமெந்து → பூச்சாடி → பூ → பழம் → பணம்
2. தேங்காய் → தேங்காய்ப்பால் → தேங்காய்ப்பூ → வினாகிரி → அச்சாறு
3. நெற்பயிர் → நெல் → அரிசி → மா → பலகாரம்

**33 தொடக்கம் 36 வரையான உருக்களில் வேறுபட்ட உருவின் மீது கோடிடுக.**



33. 
(1) (2) (3). (4)



34. 
(1) (2) (3). (4)



35. 



36. 

**37 தொடக்கம் 40 வரையான வினாக்களில் அடுத்துவரும் உருவத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

37.  
(1) (2) (3)

38.  
(1) (2) (3)

39.  
(1) (2) (3)

40.  
(1) (2) (3)

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2006

## பகுதி - II

ஆசிரியர் :- த.அம்பிகைபாகன்

- பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

1) கல்லும் மலையும் குதித்து வந்தேன்-பெரும்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரித்த சமவெளி-எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து வந்தேன்.

2) காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்-அதில்
கண்குளிரப் பயிர் கண்டு வந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்து வந்தேன்- அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்.

3) மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்- நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன் - மிகத்
தேனும் தினையும் சேர்த்து வந்தேன்.

**1.** 1) இப்பாடல் எதைப்பற்றிக் கூறகிறது?

2) இதில் கூறப்பட்ட பழமொன்றின்'பெயரை எழுதுக?

3) இப்பாடலில் வெள்ளத்தில் மிதந்து வந்த பொருள் எது?

4) ஆசை தீர விளையாடியது யார்?

5) முதலாவது பாடலில் கூறப்படும் அடுக்குத் தொடர் எது?

6) ஒத்த சொல் தருக?
1. காடு.................... 2.ஆசை....................

7) எதிர்க்கருத்துச் சொல் தருக?
1.இறங்கி.................... 2.நல்ல....................

8) மலர்ப்பொழில் என்பது(மலர்மாலை, குளிர்ந்தநிழல், பூஞ்சோலை)

9) தேங்கனி என்பது (வாழைப்பழம், பலாப்பழம், இனியபழம்)

10) வந்தேன் என்பதை நிகழ் காலத்தில் எழுதுக?

**2. பின்வரும் வாக்கியங்களை இரு வாக்கியமாக பிரித்தெழுதுக?**

1) பெரும் புயல் வீசியமையால் பெருமரங்கள் வேரோடு சாய்ந்தன.
..............................................................................

2) மழையும் புயலும் குறைய ஆற்றில் வெள்ளம் வழிந்தது
..............................................................................

3) மாலாவும் கமலாவும் பாட்டுப்பாடினார்கள்
..............................................................................

4) நான் சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கி வந்தேன்
..............................................................................

5) வகுப்பு ஆசிரியர் வந்து கணிதபாடம் படிப்பித்தார்.
..............................................................................

**3. பின்வரும் தமிழ் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக**

1)காடு 2) மலர் 3) கதிரை 4) விவசாயி

**4. பின்வரும் சிங்களச் சொற்களை தமிழில் எழுதுக?**

1) අඹ .............. 2) ගුරුතුමී ...........3) මේසය ...........4) ළමයා ..........

**5. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1) சுதா, கலா இருவரிடமும் உள்ள பணத்தைப் போன்று சம அளவிலான பணம் தர்சி, மாலாவிடம் உண்டு. இந்நான்கு பேரிடமும் 650 ரூபா உள்ளது. தர்சியை விட மாலா 30 ரூபா கூடுதலாக வைத்திருக்கிறாள். மாலாவிடம் உள்ள பணம் எவ்வளவு?

2) 3 Kg பொருள் ஒன்றை நிறுப்பதற்கு மறுதட்டில் எத்தனை 500g படிகளைப் போடவேண்டும்?

3) கடையில் 2 Kg அரிசியை வாங்கிக்கொண்டு கடைக்காரனிடம் 70 ரூபாவைக் கொடுத்தபோது மீதிப்பணமாக 8 ரூபா கிடைத்தது. 1 Kg அரிசியின் விலை யாது?

4) 18 ☐ 2=9 வெற்றுக்கூட்டில் வரவேண்டிய கணிதக்குறியீடு யாது?

5) ஒரு பாடசாலையொன்றில் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட ஆண்களினதும் பெண்களினதும்எண்ணிக்கை அளவிடைக்கு வரையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆண்கள் | O O O O O O |
| பெண்கள் | O O O O O O O |

பெண்கள் தொகை 325 ஆயின் ஆண்களின் தொகை யாது?

6) ஒரு அப்பியாசக் கொப்பியின் விலை ரூ 6.50 எனின் 1/2 டசின் கொப்பியின் விலை யாது?..............................................................

7) 4 மணித்தியாலம் எத்தனை நிமிடங்கள்?..............................................

8) கோலத்திலுள்ள பொருத்தமான எண்ணைக்கண்டு புள்ளிக்கோட்டில் எழுதுக?
96,48,24, ..............................................

9) XXV + XIII= உரோம எண்களின் கூட்டுத்தொகையை உரோம எண்களில் தருக? ..............................................

10) பி.ப 5 மணி 15 நிமிடத்தை நியம நேரத்தில் தருக?..............................

**6. ஒரு கதையிலுள்ள பந்தி நான்கு துண்டுகளாக கிழிக்கப்பட்டு ஒழுங்கின்றி உள்ளது. அதை வாசிக்கக்கூடிய விதத்தில் ஒழுங்கு படுத்தி எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| திருக்குன்றத்திலே இவர் அறிவு பாடசாலையிலே | என்பவர் உள்ளவர் மிக்கவராக வேலை | புலவர் வல்லமை காணப்பட்டார் அதிபராக | வாழ்ந்தார் கவிபாடும் தமிழ் செய்தார் |

1) ..............................................................
2) ..............................................................
3) ..............................................................
4) ..............................................................

**7. கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை அவதானித்து அத்தகவல்கள் சரியாயின் 'சரி' என்றும் பிழையாயின் 'பிழை' என்றும் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) களிமண் தண்ணீரைத் தேக்காது (............)
2) தூரத்தை அளப்பதற்கு கிலோகிராமில் அளப்பார்கள் (............)
3) பப்பாசிப் பூ இருபாற் பூவாகும் (............)
4) ச,ரி,க,ம,ப,த,நி என்பது ஏழு சுரங்களாகும் (............)
5) கோலாட்டப் பாடல் நாட்டார்பாடல் வகையைச் சேர்ந்தது (............)
6) பூமியின் ஈர்ப்பு சக்தியை கண்டறிந்தவர் சேர் ஐசக் நியுட்டன் (............)
7) தையல் உபகரணங்களில் தீ தாள் ஒன்றாகும் (............)
8) இலங்கையில் பொதுத்தேர்தல் 5வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் (............)
9) மஞ்சள் அடிப்படை நிறங்களில் ஒன்றாகும் (............)
10) ஆந்தை தலைகீழாகத் தொங்கிக்கொண்டு உறங்கும் பறவையாகும் (............)

**8. 'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையை 'ஆ' பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக**

| | | |
|---|---|---|
| 1) புற்றுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் | ............. | 1) பனை, கமுகு |
| 2) எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் | ............. | 2) மரங்களை வளர்த்தல் |
| 3) ஒரு வித்திலைத் தாவரம் | ............. | 3) புவிச்சுற்றுகை |
| 4) இரு வித்திலைத் தாவரம் | ............. | 4) தலதா மாளிகை |
| 5) மண்ணரிப்பைத் தடைசெய்தல் | ............. | 5) சப்புகஸ்கந்த |
| 6) சூழல் மாசடைதல் | ............. | 6) மகரகம |
| 7) இரவு பகல் | ............. | 7) வேம்பு, புளி, மா |
| 8) விவசாயியின் நண்பன் | ............. | 8) சித்திரம் |
| 9) காய்ந்த மலர் இதழ்கள் | ............. | 9) மண்புழு |
| 10) கண்டி | ............. | 10) வாகனங்களின் புகை |

**9. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) குழந்தை அழுதது இதில் வரும் பயனிலைச் சொல்?
(1) குழந்தை (2) அழுதது (3) நீ

2) இலங்கையில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கும் மாவட்டம்?
(1) நுவரெலியா (2) கொழும்பு (3) அம்பாறை

3) எனக்கு இப்போது 6 வயது அண்ணாவின் வயது 14 ஆகும். எனக்கு எத்தனை வயது வரும் போது அண்ணாவின் வயது இருமடங்காகும்?
(1) 7 வயது (2) 8 வயது (3) 14வயது

4) மாலையில் மலரும் பூ?
(1) ரோஜா (2) செவ்வந்தி (3) முல்லை

5) மேற்குத்திசைக்கும், வடக்குத் திசைக்கும் இடைப்பட்ட திசைக்கு எதிர்திசை யாது?
(1) வாயுமூலை (2) நிருதிமூலை (3) அக்கினிமூலை

6) அகரவரிசைப்படி சொல்லுக்குப்பொருள் கூறும் நூல்?
(1) அகராதி (2 ) திருக்குறள் (3) கவிதை

7) புத்தகமொன்றில் அதிகமாக இருப்பது?
(1) பக்கங்கள் (2) எழுத்துக்கள் (3) சொற்கள்

8) பூக்காத தாவரம் எது?
(1) முல்லை (2) கரும்பு (3) வேம்பு

9) உலகில் அதிக மக்கள் கொண்ட நாடு எது?
(1) இந்தியா (2) சீனா (3) அவுஸ்ரேலியா

10) மாற்றான் உறவு அழிவைத் தரும் மாற்றான் என்பது?
(1) நல்லவன் (2) அயலவன் (3) பகைவன்

**10. பின்வரும் படங்களுக்குரிய பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் எழுதுக**

(கண்டங்கத்தரி, பொண்ணாவரசு, கற்றாளை, கார்த்திகைக்கிழங்கு)




(1)................................ (2)..............................
(3)................................ (4)..............................

**விடைகள் திங்கள் வெளியாகும்.**

# யாழ்ப்பாணத்தில் 134 பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலக அதிகாரி தெரிவிப்பு





யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட 322 கண்ணிவெடி அபாயமுள்ள பிரதேசங்களில் 134 பிரதேசங்கள் முற்றாக மிதிவெடி அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசங்களாக மாற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த மிதிவெடி அகற்றும் செயற்பாடு குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது 73 கண்ணிவெடி அபாயமுள்ள பிரதேசங்கள் - மிதிவெடிகளை அகற்றுவதற்காக மிதிவெடி அகற்றும் நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 20 இற்கும் மேற்பட்ட பிரதேசங்களில் தற்போது மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன் டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தால் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் பன்னாலையில் இரு கண்ணிவெடி அபாய பிரதேசங்களும் - உடுவில் பிரதேச செயலர் பிரிவில் குப்பிளான் தெற்கில் ஒரு கண்ணிவெடி அபாயப் பிரதேசமும் - நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கொக்குவில் கிழக்கில் இரு கண்ணிவெடி அபாயப் பிரதேசங்களுமாக மொத்தம் ஐந்து கண்ணிவெடி அபாயப் பிரதேசங்களான 31 ஆயிரத்து 242 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் முற்றாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு அண்மையில் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி - பத்தமேனிப் பகுதியில் இராணுவ மிதிவெடி அகற்றும் பிரிவால் யுத்தப் பிரதேச சுத்திகரிப்பு முறைமூலம் துப்புரவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டது.

இதேவேளை, அரியாலைப் பகுதியில் இராணுவ முகாமை அண்டிய மிதிவெடி அபாயப் பிரதேசத்திலும், தெல்லிப்பளையில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியிலும் உள்ள மிதிவெடி அபாயப் பிரதேசத்திலும் மிதிவெடி அகற்றுவதற்கு - இராணுவத் தரப்பால் அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் குரு பூர்ணிமா தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வட பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்பாளர் ம.இராசரத்தினம் சிறப்பு சொற்பொழிவாற்றுவர்.

# புதிய நிர்வாகசபை பதவியேற்பு

யாழ்ப்பாணம் —

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2006-2007 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை பதவியேற்பு வைபவமும், பதவிப்பிரமாண நிகழ்வும் இன்று காலை 10.30 மணிக்கு கழகமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கழகத்தலைவர் லயன் க.கனகராசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்- பிரதம விருந்தினராக லயன்ஸ்கழக வடக்குப் பிராந்திய பிரதம செயலாளர் டொக்டர் வி.யோகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

கண்பார்வை அற்றவர்களுக்கு மூக்குக்கண்ணாடி, வலுவிழந்த ஒருவருக்கு சக்கரநாற்காலி என்பனவும் இந்த நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

# பருத்தித்துறை நகரசபை நான்காவது இடத்துக்கு மாறியது

யாழ்ப்பாணம் —

தும்பளை மணியகாரர் சந்தியிலுள்ள கட்டடங்களில் இயங்கி வந்த பருத்தித்துறை நகரசபை அலுவலகம் தற்போது பருத்தித்துறை கந்த உடையார் கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபைக்கு சொந்தமான அலுவலகக் கட்டடம் - பருத்தித்துறை கடற்கரை வீதியில் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ளது.

1987 ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போது பிரதேச சபைக்குரிய கட்டடம் பாரியளவில் சேதமடைந்ததுடன் அங்கு அலுவலகத்தை நடத்த முடியாமலும் போனது.

இதனையடுத்து கடந்த 20 வருடங்களாக தும்பளை வீதியிலுள்ள மூன்று கட்டடங்களில் மாறி மாறி இந்த அலுவலகம் இயங்கி வந்தது.

இந்த நிலையில் தற்போது இந்த அலுவலகம் நான்காவது இடமாக கந்த உடையார் ஒழுங்கையிலுள்ள கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# சிறுவர்களுக்கு போசாக்கு உணவு

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு போஷாக்குத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் - பாதிக்கப்பட்ட சிறுவர் ஒருவருக்கு வாராந்தம் 800 ரூபா பெறுமதியான போஷாக்கு உணவுகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு போஷாக்கு உணவுகள் வழங்கப்படவுள்ளன.

# பண்பு நிலையிலிருந்து தவறுவதன்மூலம் மாணவப் பருவம் வீணடிக்கப்படுகிறது

## கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

மாணவர்கள் பண்புநிலை தவறி தமது மாணவ பருவத்தை வீணாக்கி வருகின்றனர் என யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்தார்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சித்திரத்துறை முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் - இன்றைய காலகட்டத்தில் மாணவ பருவத்தில் 24 சதவீதமான மாணவர்கள் போதைப் பொருட்களைப் பாவிப்பதாக யுனிசெப் நிறுவனம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

இவர்களை இந்நிலையிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்கு புத்தகங்கள் வாசித்தல் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த கல்வியியல் செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கான செயற்றிறனுள்ள பாடசாலைகளில் விரைவாக மேற்கொள்ளவேண்டும்.

இன்றைய மாணவர்கள் வருங்காலத் தூண்கள். அவர்களுடைய நல்ல பண்புகளை ஊட்டி வளர்க்க வேண்டும். அப்போது தான் மாணவர்கள் சாதனை மட்டம் உயரும்.

மாணவர்களை இந்நிலைக்குக் கொண்டுவர வேண்டியது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களது கடமையாகும்.

பெரும்பாலான மாணவர்கள் கல்வியை கசப்பாக்கி வருகின்றனர். சரியான வழிகாட்டலுடனான புரிந்துணர்வு சூழ்நிலையை மாணவர்களிடையே ஏற்படுத்துவதன் மூலம் கசப்பான நிலையை மாற்றலாம்.

மாணவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆறுதல் பெறுவதற்கான, பாதுகாப்பான சூழலை பாடசாலைகளிலும், வீட்டிலும் ஏற்படுத்தவேண்டியுள்ளது.

இதற்காக சிறந்த கல்விக் கொள்கையை எமது பாடசாலைகளில் ஏற்படுத்த நவீன மனித வள முகாமைத்துவ செயற்றிறனை மிக விரைவாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : க.கீர்த்திகன்
முகவரி : நோர்வே.




## சமுர்த்தி பயனாளிகள் பெறும் நன்மைகள்

# பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட சமுர்த்தித் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கு கடந்த முதலாம் திகதியிலிருந்து பின்வரும் நன்மைகள் பிரதேச செயலகப் பிரிவினூடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, பின்வரும் நன்மைகளை உரிய சமுர்த்திப் பயனாளிகள் தங்களின் கிராமத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகப் பிரதேச செயலகத்தில் உடனடியாக பெற்றுக் கொள்ளலாம் என அரசாங்க அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

**1) மகப்பேறு உரித்து நன்மை பெறுவோர்.**

1.சமுர்த்தி பயநுகரியின் மனைவிக்கு கிடைக்கும் குழந்தையின் பொருட்டு மாத்திரமே மகப்பேற்று உரித்து.
2.பயநுகரி பெண்ணானால் அவருக்கும் உரித்து.

கொடுப்பனவு -
1) முதலாவது மகப்பேற்றுக்கு 5000 ரூபா. இரண்டாவது மகப்பேற்றுக்கு 2500 ரூபா.

வரையறை -
முழு வாழ்க்கைக் காலத்தில் இரண்டு மகப்பேற்றுக்கு மட்டும் உரித்து. இரட்டைக் குழந்தைகளானால் அதில் ஒரு குழந்தைக்கு மட்டும் உரித்து. இதில் முதலாவது மகப்பேற்று நன்மையைப் பெறாத ஒருவர் இரண்டாவது மகப்பேற்று நன்மையாக 2500 ரூபா மட்டும் பெறுவர்.

ஆவணங்கள் -
1.பிறப்புச் சான்றிதழ்/அத்தாட்சிப் பத்திரம்/சத்துணவுப்படிவம்.

**2) திருமணம்**

நன்மை பெறுவோர் -
1) இரண்டு சமுர்த்திப் பயநுகரிகள் குடும்பத்துக்கிடையில் திருமணம் நடைபெற்றால் இரு குடும்பத்துக்கும் உரித்துண்டு.
2) பயநுகரி/பயநுகரியின் பிள்ளையின் திருமணத்துக்கு உரித்து.
3) எதுவித உரித்தும் பெறாத ஒருவர் (கணவர்/மனைவி)இறந்த பின்னர் சட்ட ரீதியாக இரண்டாவது திருமணம் மேற்கொண்டால் அதற்குரித்துண்டு.
4) விவாகரத்து செய்த ஒருவர் மீண்டும் திருமணம் மேற் கொண்டால் உரித்துண்டு. ஆனால் ஏற்கனவே உரித்துப் பெறாதவராக இருத்தல் வேண்டும்.

கொடுப்பனவு -
1)பயநுகரி திருமணமாயின் 3000 ரூபா.
2)வேறு ஒருவரின் திருமணமாயின் 1000 ரூபா.

வரையறை -
1)இந்தக் கொடுப்பனவு முழு வாழ்க்கைக் காலத்தில் இரண்டு திருமண நிகழ்வுகளுக்கு மட்டும் வழங்கப்படும். ஒரு கொடுப்பனவு பெற்று அதிலிருந்து 12 மாதங்கள் பூர்த்தியான பின்னரே இரண்டாவது கொடுப்பனவு பெற்றுக் கொள்ளலாம். கணவன் மனைவி நீண்டகாலம் வாழ்ந்த பின்னர் சட்டரீதியான தேவை கருதி திருமணம் முடித்தால் உரித்தில்லை.

ஆவணங்கள் -
1) திருமணப் பதிவுச் சான்றிதழ்
2) பயநுகரியுடனான உறவை அத்தாட்சிப்படுத்தும் ஆவணம்.

**3) வைத்தியசாலைக் கட்டணம்**

நன்மை பெறுவோர் -
1) பயநுகரி
2) பயநுகரி அங்கத்தவர்.
3) அவரது கணவர் அல்லது மனைவி

வரையறை -
1.அரசினர் வைத்தியசாலையில் அல்லது ஆயுர்வேத வைத்தியசாலையில் 7அல்லது 7 இற்கும் மேற்பட்ட தினங்கள் இருத்தல் வேண்டும். இதன் போது அனுமதிக்கப்பட்ட தினமும், வெளியேறிய தினமும் உள்ளடக்கப்படும்.

கொடுப்பனவுகள்-
தினத்துக்கு 50 ரூபா வீதம் ஒரு வருடத்தில் 30 நாட்களுக்கு 1500 ரூபா மாத்திரம் வழங்கப்படும்.

சமர்ப்பிக்கும் ஆவணங்கள்-
1.சிகிச்சை அட்டை / வைத்தியரின் சான்றிதழ்.

பெற்றுக் கொள்ளும் நடை முறை-
பயநுகரி ஒருவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறி 7 தினங்களுக்குள் படிவங்களை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

பயநுகரி ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சையின் போது இறந்தால் மரணத்துக்கான கொடுப்பனவு மட்டும் வழங்கப்படும்.

**4) மரண உரித்து**

நன்மை பெறுவோர் -
1) சமுர்த்தி பயநுகரி.
2)சமுர்த்திப் பயநுகரியின் வாழ்க்கைத் துணை.
3) அவரது குடும்பத்தில் திருமணமாகாத பிள்ளைகள்.
4)பயநுகரியின் தாய் அல்லது தந்தை மரணமாகி இறுதிக் கிரியைகள் பயநுகரியின் வீட்டில் நடைபெற்றால்.

கொடுப்பனவு - 1000 ரூபா.

வரையறை -
1.தற்கொலையென்றால் உரித்து இல்லை.
2. குழந்தையின் மரணமாயின் பிறந்து 6 மாதங்களுக்கு மேல் உயிர் வாழ்ந்திருத்தல் வேண்டும்.
3.பயநுகரி கிளர்ச்சி, கலவரம் என்பவற்றால் இறந்திருந்தால் நீதிமன்ற தீர்ப்பின்படி நிரபராதி என தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் உரித்துண்டு.
4.மரண இறுதிக் கிரியைகள் நடைபெறுவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

ஆவணங்கள்-
1.மரணப் பதிவுச் சான்றிதழ்/மரணம் நிகழ்ந்ததாக உறுதி செய்து கொடுக்கும் சான்றிதழ்.

# சாளரம் வழியே ஓவியன் விரல்கள்

## ஓவியர் விஜிதனின் ஓவிய கண்காட்சியும் ஓவியத் தொகுப்பு நூல் வெளியீடும் !



கிளிநொச்சி—

இளம் ஓவியர் விஜிதனின் ''சாளரம் வழியே ஓவியன் விரல்கள்'' என்னும் ஓவியக் கண்காட்சியும், ஓவியத் தொகுப்பு வெளியீடும் நேற்றுமுன்தினம் காலை கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

காட்சிக் கூடத்தை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் திறந்து வைத்தார். காட்சிக் கூடத்தில் கன்வஸில் நெய்வர்ணம் கொண்டு வரையப்பட்ட 30 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. வன்னிப் பகுதியில் நடைபெறும் இந்த வகையான முதல் ஓவியக் காட்சி இது வென்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ஓவியரின் ஓவியங்களைக் கொண்ட நூல் வெளியிடப்பட்டது. முதற் பிரதி தமிழீழ தேசியத் தலைவருக்கு அரசியல்துறை துணைப்பொறுப்பாளரிடம் வழங்கப்பட்டது.

இங்கு ஆசியுரை வழங்கிய ஓவியர் ஆசை.இராசையா தனக்கான தனிப்பாணியை கண்டடைவதே கலைஞனின் திறமை எனக்குறிப்பிட்டார்.

ஓவியர் ரமணி உரையாற்றுகையில் -

யாழ். பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்புத் துறையின் மாணவனான விஜிதனின் முதல் ஓவியக் கண்காட்சி இது. அத்தோடு யாழ். பல்கலைக்கழகத்தில் இந்தத் துறை ஆரம்பிக்கப்பட்ட ஆறு வருடங்களில் அதன் மாணவர்களுள் ஒருவரால் நடத்தப்படும் முதலாவது ஓவியக் காட்சியும் இதுவாகும் எனக் குறிப்பிட்டார்.

நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் தனதுரையில்-

கற்பனை வளத்தை தனக்குள் வளர்த்துக் கொள்ளும் ஒருவரே எந்தத் துறையிலும் அதன் உச்சத்தை அடையமுடியும். அந்தக் கற்பனை வளத்தை வளர்த்துக் கொள்வதற்கு இப்படியான காட்சிகள் உதவுகின்றன எனத் தெரிவித்தார்.

ஆய்வுரை நிகழ்த்திய மூத்த ஊடகவியலாளர் ராதேயன், கலைஞர்கள் நாட்டின் சொத்தாவார்கள். அவர்களுடைய படைப்புக்கள் அந்த நாட்டின் வாழ்க்கை வரலாற்றை எடுத்து விளக்குகின்றன. இந்த வகையான படைப்புக்களை நிரந்தரமாகக் காட்சிப் படுத்தக்கூடிய அமைப்பு எமக்குத் தேவை என வலியுறுத்தினார்.

இந்தக் கண்காட்சியை ஆர்வலர்கள், மாணவர்கள், கலைஞர்கள் எனப் பெருமளவானோர் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் கட்டுமான பயிற்சி நிறைவு

கிளிநொச்சி—

கிளிநொச்சி - வட்டக்கச்சி வேந்தன் மணிவண்ணன் பயிற்சிப் பாசறை மக்கள் கட்டுமானப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு வட்டக்கச்சி பிரதேசப் பொறுப்பாளர் சுரேன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை ஈழநாதம் நிறுவனப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஏற்றினார்.

கப்டன் வேந்தனின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் அருள் ஏற்றினார். மலர் மாலையை சகோதரர் அணிவித்தார்.

கப்டன் மணிவண்ணனின் திருவுருவப்படத்துக்கு தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் புலிவீரன் சுடரேற்ற, மாவீரரின் சகோதரர் மலர் மாலை அணிவித்தார்.

நிகழ்வில் சிறப்புரையை க.வே. பாலகுமாரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து, முன்னதாக நடத்தப் பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (கு)

# கிளிநொச்சி மருத்துவமனை கொடிவாரம் மேலும் நீடிப்பு !

கிளிநொச்சி—

கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பராமரிப்புக்கென நடத்தப்பட்டு வரும் கொடிவாரம் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான கொடிவாரம் மேலும் ஒருவாரம் நீடிக்கப்பட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை தொடருமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

புதிதாக அமைக்கப்பட்டு, திறக்கப் படவுள்ள கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் வளர்ச்சிக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும், தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவரும் கொடிவார நடவடிக்கைக்கு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவார்களெனவும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை மேம்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவமனை நாளைமறுதினம் காலை [illegible] மணிக்கு திறக்கப்படவுள்ளதாக சுகாதாரத் திணைக்களமும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை மேம்பாட்டுப் பேரவையும் தெரிவித்தன. (கு)

# மன்னார் பள்ளிமுனையில் இளைஞர் ஒருவர் கைது!

மன்னார்—

மன்னார் பள்ளிமுனையில் பொனிப்பாஸ் சுரேந்திரகுமார் (வயது 17) எனும் இளைஞர் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த இளைஞரிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் தண்ணீர் வாங்கி குடித்து விட்டுச் சென்றதைக் கண்ட கடற்படையினர் அவரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்த இளைஞரைக் கடுமையாகத் தாக்கிய கடற்படையினர் நேற்றுமுன்தினம் மாலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக மன்னார் சக வாழ்வு நிறுவனத்தினர் மேற்கொண்ட கடும் முயற்சியை அடுத்து- அழைக்கப்படும் நேரங்களில் பொலிஸ் நிலையம் வரவேண்டும் என்ற கடுமையான நிபந்தனையுடன் இவர் விடுதலை செய்யப்பட்டார். (மோ)

# காவலரணை அகற்றுமாறு மன்னார் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி—

மினிமுகாமாக மாறிவரும் மன்னார் வைத்தியசாலை வளாகத்திலுள்ள காவலரணையும், பொது விளையாட்டரங்கிலுள்ள காவலரணையும் அகற்றி மக்களின் அன்றாட வாழ்வுக்கு உதவவேண்டுமென மன்னாருக்கு வருகை தந்த ஆயர் பேரவையினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட உயர் அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் ஆகியோருடன் ஆயர் பேரவையினர் நடத்திய ஒன்றுகூடலிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மன்னாருக்கு விஜயம் செய்த இலங்கை ஆயர்மன்றத் தலைவரும், கண்டி ஆயருமான ஆயர் ஹெரல் அந்தோனி ஆகியோருடன் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் ஆகியோர் இந்த ஒன்று கூடலை நடத்தினர்.

இதற்கு முன்பாக ஆயர் பேரவையினர் கடற்படையினரின் வெறியாட்டத்தில் அழிவுற்ற பேசாலை, வங்காலைப்பாடு கிராமங்களைச் சென்று பார்வையிட்டதுடன், மக்களைச் சந்தித்து உண்மை நிலவரங்களையும் அறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# கடும் வரட்சியால் குடிநீருக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி—

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக மல்லாவிப் பகுதி கிணறுகளில் நீர் வற்றி, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், நாளாந்தம் குடிநீருக்காக மக்கள் நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மல்லாவியிலுள்ள குமுதன் குடியிருப்பு மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பழுதடைந்த நிலையிலிருந்த குழாய்க்கிணறுகளைத் திருத்திக் கொடுத்துள்ளது. (கு)

# அத்தியாவசிய குழுக்கூட்டம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் குழுக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் கேட்டுள்ளார்.

# பயிற்சியை நிறைவு செய்தோருக்கு தொழில் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி—

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லை தொழில்நுட்பக் கல்லூரியால் பொருண்மிய மதியுரையகம் மற்றும் வூஸ் நிறுவன உதவியுடன் தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முல்லை தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாம் கட்டப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கே இந்த தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்த தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் -

மரவேலைப் பயிற்சியை நிறைவு செய்த 19 பேருக்கும், மேசன் பயிற்சியை நிறைவு செய்த 18 பேருக்கும், மின்னொட்டுனர் பயிற்சியை நிறைவு செய்த 20 பேருக்கும், நீர்குழாய் பொருத்துதல் பயிற்சியை நிறைவு செய்த 22 பேருக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (கு)


# விவசாய உபகரணம் வழங்கல்

கிளிநொச்சி—

ஒட்டுசுட்டானில் விவசாயம் மேற்கொண்டு வருபவர்களில் 50 பேருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை இந்த விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், ஒட்டுசுட்டான் பகுதி விவசாய போதனாசிரியரால் விவசாயம் தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டது. (கு)





கரும்புலிகள் நாளை முன்னிட்டு அழகியல் கலாமன்ற ஏற்பாட்டில் மரக்கன்றுகள் நாட்டப்படுவதைப் படங்களில் காணலாம். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. - திருக்குறள்.

## நமது நோக்கு

# இரட்டை வேடம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினை விவகாரத்தில் இரட்டைவேடம் போடுவதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம்சாட்டியிருந்தார்.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும், ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்சவும் அதே போன்று மகிந்த இரட்டைவேடம் போடுவதாகக் குற்றம்சாட்டியுள்ளனர்.

நாட்டின் மூன்று முக்கிய தரப்புக்களுக்கு ஜனாதிபதி மகிந்த இரட்டைவேடம் போடுவதாக தெரிகின்றார் எனின் - உண்மையில் அவர் எத்தகைய தோற்றத்துடன் இருக்கிறார் என்பது தெளிவாகும்.

புலிகளுடன் சமாதானப் பேச்சு விடயத்திலும் சரி, ஐ.தே.கவுடன் அரசியல் இணக்கப்பாடு காணும் விடயத்திலும் சரி, கூட்டணிக் கட்சியைத் திருப்திப்படுத்தும் விடயத்தில் ஜே.வி.பியுடனும் சரி, மகிந்த - உண்மைத் தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை.

இதனால்தான் இந்த மூன்று பிரதான தரப்பினருக்கும் ஜனாதிபதி மகிந்த இரட்டைவேடம் போடுவதாகத் தென்படுகிறார்.

சமகாலத்தில் - ஒத்த கருத்து இல்லாத, வெவ்வேறு மூன்று தரப்புக்களிலிருந்து ஒரே மாதிரியான கருத்து வெளிவந்திருக்கும்போது, இதை சாதாரணமானதொரு விமர்சனமாக எடுத்துக்கொள்ளமுடியாது.

தன்னை யதார்த்தவாதியாகக் காட்டிக்கொண்ட மகிந்த - ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், புதிய யுகம் ஒன்றை படைக்கப்போவதாகக் கூறினார்.

ஆனாலும், கடந்த 7 மாதங்களில் அவர் படைத்த சாதனை - நான்கு வருடங்களாக ஓரளவுக்கேனும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த மக்களை அல்லல்படவைத்ததுதான்.

புலிகளுடனான சமாதானப் பேச்சு விடயத்தில் உண்மைத் தன்மையை வெளிக்காட்டத் தவறியதால், சமாதானப் பேச்சுக்கள் இழுபறிப்பட்டு இப்போது கிட்டத்தட்ட 'இல்லை' என்ற நிலைக்கு வந்துவிட்டது.

ஒருபுறம் சமாதானத்துக்காகக் கையை நீட்டிக்கொண்டு மறுபுறத்தில் - புலிகளை பலவீனப்படுத்த எத்தனித்ததன் விளைவை அவரே அனுபவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுபோலவே, ஐ.தே.கவுடன் அரசியல் ரீதியான புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளவும் மகிந்த தவறிவிட்டார். ஐ.தே.கவுடன் இணங்கிப்போவதாகக் கூறிக்கொண்டாலும் - அவ்வப்போது அந்தக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொண்டே அதைச் சிதைப்பதில்தான் கவனம் செலுத்தினார்.

பிரதியமைச்சர் பதவிகளைக் கொடுத்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப் போட்டுவருகிறார் மகிந்த.

நான்காவது உறுப்பினரையும் மகிந்தவின் திட்டத்துக்குப் பலிகொடுத்துவிட்டு - சூடுகண்ட பூனையாக ஐ.தே.க. இப்போது கூறியிருக்கிறது - இனி ஒரு போதும் மகிந்தவின் நடவடிக்கைகளை ஆதரிக்க முடியாது என்று.

ஐ.தே.க. தன்பக்கத்தில் இருந்தால் இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்காததற்கான குற்றச்சாட்டுக்களுக்குள்ளாக நேரிடும் என்று மகிந்தவுக்கு நன்கு தெரியும்.

எனவே, இப்படி சூழ்ச்சிகளைச் செய்து ஐ.தே.கவை வெறுப்பேற்றிவிட்டால், ஒருமித்த கருத்துடனான தீர்வுத்திட்டம், சர்வகட்சி மாநாட்டு இணக்கப்பாடு என்பன ஏற்படுவதற்குத் தான் பொறுப்பேற்கத் தேவை யில்லை என்று மகிந்த சிந்திக்கக்கூடும்.

அதேவேளை, ஜே.வி.பியுடனும் கூட மகிந்தவால் இணக்கப்பாட்டுடன், உண்மைத் தன்மையுடன் நடந்துகொள்ளமுடியவில்லை.

ஆக ஜே.வி.பி., ஐ.தே.க. போன்ற சிங்களக் கட்சிகளுடன் உண்மைத் தன்மையுடன் நடந்துகொள்ள முடியாத மகிந்தவால் தமிழருடன் உண்மைத்தன்மையுடன் நடந்துகொண்டு, நியாயமான தீர்வை வழங்குவார்? என்றா எதிர்பார்க்கமுடியும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்

செய்தி:- இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இணைந்து செயற்படுமாறு பிரதான கட்சிகளிடம் இந்தியா வலியுறுத்து



(நன்றி - டெய்லி மிரர்)

# பேசாலைத் தாக்குதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆலோசனை!

## சட்டமா அதிபருக்கு மகிந்த உத்தரவு



மன்னார்

பேசாலை தேவாலயத் தாக்குதலில் தொடர்புடையோர்மீது நடவடிக்கை எடுப்பது குறித்து சட்ட மா அதிபரின் கருத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட உயர்நிலை இராணுவக் குழுவினர் தாக்குதல் நடத்தியோரை அடையாளம் கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து தாக்குதலில் தொடர்புடையோர்மீது நடவடிக்கை மேற்கொள்வது குறித்து சட்டமா அதிபரிடம் மகிந்த கருத்துக் கேட்டுள்ளார்.

கடந்த ஜுன் மாதம் 17 ஆம் திகதி பேசாலை கடற்பரப்பில் கடற்சமர் நடந்ததையடுத்து 6 ஆயிரம் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம்மீது கடற்படையினர் கைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர். இதில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 47 பேர் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் அடிகளார் வத்திக்கானுக்கு நீண்ட கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார். அதில் கடற்படையினரே இந்தக் கொடூரச் செயலைச் செய்ததாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் மகிந்தவும் விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். இராணுவத்தினர் உயர்நிலைக்குழு விசாரணை நடத்தும் என்று அறிவித்திருந்தார். அந்தக்குழு தற்போது விசாரணைகளை நிறைவுசெய்து தாக்குதல் நடத்தியோரை அடையாளம் கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவர்கள் மீதான நடவடிக்கை குறித்து எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படக் கூடும் என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# மகிந்தவின் என்.டி. ரி.வி பேட்டி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாம்!

## ராஜித சேனாரத்ன புகழாரம்

கொழும்பு

இந்திய தொலைக்காட்சியான என்.டி.ரிவிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அளித்த நேர்காணல் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக அந்த நேர்காணலில் ஜனாதிபதி மகிந்த தெரிவித்திருக்கும் கருத்துரைகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்தினால், ஐக்கிய தேசியக் கட்சி அதனை ஆதரிக்கும்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் பேசிய ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்ததாவது -



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டிருக்கும் மகச்சிறந்த கருத்துக்கள் அவை. வரலாற்றுச் சிறப்புமிக்கவை. நாங்கள் முழுமையாக அதனை ஏற்றுக்கொள்கிறோம். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி மகிந்த உறுதியாக இருந்தால் நாம் அவரை ஆதரிப்போம்.

இலங்கைப் பிரஜைகளான நானும், பிரபாகரனும் உட்கார்ந்து பேசுகிறோம் என்ற மகிந்தவின் நிலைப்பாட்டைத்தான் விஜயகுமார துங்க மேற்கொண்டிருந்தார்.

காமினி திஸநாயக்க, லலித் அத்துலத்முதலி, பிரேமதாஸ ஆகியோரும் இந்த நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தனர். அரசியலின் பெயரால் இடம்பெறும் படுகொலைகளுக்கு நாம் அனைவரும் பொறுப்பானவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஆதரவளிக்க ஐ.தே.க. மறுப்பு

கொழும்பு

அரசியல் யாப்பின் 18 ஆவது திருத்த முயற்சியில் அரசாங்கம் தோல்வி யடைந்துவிட்டது.

நாடாளுமன்றில் இந்தத் திருத்தத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்க மறுத்துவிட்டது. இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாக அரசியல் யாப்புச் சபையைச் செயற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனை விதித்துள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் இந்தத் திருத்தம் தொடர்பாக பேசுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் ஆதரவளிப்பதாக அறிவித்துவிட்டு இப்போது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டது என்றார்.

அரசியல் யாப்பின் 18 ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்துள்ளது.

மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அமைக்க வகைசெய்யும் இந்த 18 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் நிறைவேற அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் குறைந்தபட்சம் 150 வாக்குகள் தேவை. ஐக்கிய் தேசியக் கட்சி ஆதரவளிக்க மறுத்தமையால் அரசாங்கத்தால் இந்தத் திருத்தத்தை நிறைவேற்ற முடியவில்லை.

# பேச்சுக்கள் மீண்டும் சாத்தியமா?

'புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் 'கொண்டு வர முடியுமா?' என்ற தலைப்பில் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்.கேணல் சுனந்த செனிவிரட்ண எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

விடுதலைப் புலிகள் முன்பிருந்த நிலையை விட இன்று வளர்ச்சி அடைந்துள்ளனர். பிரச்சினை மிகவும் முற்றிய நிலைக்கு சென்றுள்ளது. எனவே நடுநிலையாளாகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. அவர்கள் தீர்ப்புக் கூறுபவர்கள் அல்ல. அனுசரணையாளர்களே. எனவே அனுசரணையாளர்கள் மீது விரலை நீட்டுவதற்கு முன் சிந்தித்தும் பார்க்க வேண்டும்.

இவ்வாறு 1987 இல் இந்திய அமைதி காக்கும் படைவந்த போது மிகப் பெரியளவில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அன்று இந்திய அமைதிப்படை இருந்திருந்தால், விடுதலைப் புலிகள் வளர்ச்சியடைந்திருக்க மாட்டார்களென்பது இன்று எமக்குத் தெளிவாகின்றது. நோர்வே இறுதித்தீர்வை வழங்கும் நீதிபதி அல்ல என்பதால், அவர்கள் அனுசரணையாளர்களாக இருப்பது குறித்து அரசாங்கம் சந்தேகத்தை ஏற்படுத்த வேண்டியதில்லை. யுத்த விற்பன்னர்களது ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாமல் தனது விருப்பத்துக்கேற்ப அப்போதைய பிரதமர் - ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது பற்றி நோர்வே மீது குற்றம் சாட்டுவதிலும் பலனில்லை.

தற்போதைய பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லும் ஒரு நடவடிக்கையாக நோர்வே அனுசரணையாளர்களால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்புத் தொடர்பாக அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே வினாக்கொத்து ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இது நல்லதொரு பிரவேசமாகும். இந்த வினாக்களை பயன்படுத்தி, பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்குத் தேவையான அவர்களது நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்வதற்காக வேறான விபரக்கொத்தை சமர்ப்பிக்கலாம்.

இரு தரப்பினரதும் எண்ணங்களைத் தெரிந்து கொண்டு பயனுள்ள விதமாக பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் தந்திரமான செயலாகும் இது. இதில் முதலாவது - நோர்வே அனுசரணை யாளர்கள் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு இரு தரப்பிலிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை தெரிந்து கொள்ளும் நோக்கில் இது தயாரிக்கப்பட வேண்டும்.

ஒன்று - நீங்கள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தயாரா?

இரண்டு - பேச்சுவார்த்தையின் போது எழுகின்றவைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, கடினமான விடயங்களைப் பின் தள்ளி தீர்வு காணக்கூடிய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கத் தயாரா?

மூன்று - அவ்வாறு பேச்சு மூலம் தீர்வுகாண்பதற்கு கடினமான விடயங்களுக்கு பாரபட்சமில்லாத சர்வதேச ஆலோசனை மூலம் தீர்வைப் பெற்றுக் கொள்ளத் தயாரா?

நான்கு - எதிரான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் யுத்த செயற்பாட்டை மேற்கொள்ள மாட்டோமென்பது தொடர்பாக உறுதி வழங்க முடியுமா?

ஆகிய விடயங்கள் இந்தக் கேள்விக் கொத்தில் சேர்க்கப்படலாம். அதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் பேச்சு வார்த்தையை முகாமைப்படுத்துவதற்கு இடவசதி கிடைக்கும். இது இரண்டாவது பிரிவு. இது அரசினதும் - விடுதலைப் புலிகளதும் வினாக் கொத்துக்களாக இருக்க வேண்டும்.

அரசாங்கம் - விடுதலைப் புலிகளிடம் கேட்கும் வினாக்களும், விடுதலைப் புலிகள் அரசிடம் கேட்கும் வினாக்களும் இதில் உட்படுத்தப்படலாம். அரச தரப்பில் விடுதலைப் புலிகளிடம் இவ்வாறான வினாக்களைக் கேட்க முடியும். அதி உச்சமாக அதிகாரங்களைப் பங்கிடும் ஆலோசனைகளுக்கு நீங்கள் உடன் படுகிறீர்களா? முதலில் நிர்வாக அதிகாரத்தைப் பெறுவதற்கும், இரண்டாவதாக அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கும் நீங்கள் விரும்புகிறீர்களா?

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்க உங்களுக்கு விருப்பமா? வடக்கு- கிழக்கில் முஸ்லிம்களுக்கு கிடைக்க வேண்டிய அரசியல் அதிகாரத்தை நீங்கள் ஏற்கிறீர்களா? ஒரு இனக்குழு மட்டுமுள்ள பிரதேசங்களில் முழுமையான அரசியல் அதிகாரத்தை அந்த இனக் குழுவுக்கும், கலப்பு மக்கள் உள்ள போது, கலப்பு அரசியல் அதிகாரத்தைப் பெற உங்களுக்கு விருப்பமா? இலங்கை இராணுவத்துக்கு, வட-கிழக்கில் தமது பணியைச் செய்யும் போது சட்ட ரீதியான உரிமை உண்டென்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா? இலங்கை தேசிய பாதுகாப்பு வியூகத்தில் வட-கிழக்கு மாகாணத்திலுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளில் உங்களின் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வர நீங்கள் தயாரா? என்ற விதமாக உசிதமான வினாக்கொத்தை விடுதலைப் புலிகளிடம் முன்வைக்கலாம்.

விடுதலைப் புலிகளுக்கு அரசின் நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்வது தொடர்பாக அது போன்று சமர்ப்பிக்கலாம்.

இவ்வாறான இரு தரப்பு நிலைப் பாட்டையும் தெரிந்து கொள்வதன் மூலம் நோர்வே அனுசரணையாளர்களுக்கு தீர்வு குறித்த பேச்சுவார்த்தை நிரலை தயாரிப்பதற்கு இயலும். பேச்சுவார்த்தை நிரலைத் தயாரிக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய மூன்று விடயங்கள் உள்ளன. இரு தரப்பும் உடன்படக்கூடிய விடயங்கள், இருதரப்பும் உடன்படாத விடயங்கள், இரு தரப்பும் பேச்சுவார்த்தைக் கட்டத்தில் நிறைவேற்றக் கூடிய விடயங்களே அவையாகும்.

அதன்படி பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். உரிய பிரவேசத்தின் மூலம் எதிர்கால நடவடிக்கைகள் மாறவும் இடமுண்டு. இதுவரை நடைபெற்ற அனைத்துப் பேச்சுக்களும் ஒரே பாதையில் பயணித்துள்ளன. அனுசரணையாளர்கள் வந்திருந்தாலும் அந்தப் பேச்சுவார்த்தைகளால் இந்தச் சிக்கல் தொடர்பாக அரசியல் எல்லையைக் கூட அண்மிக்க முடியவில்லை. ஆனால், பேச்சுவார்த்தை நீடிக்கப்படாமல் குறிப்பிட்ட கால நிகழ்ச்சித் திட்டத்தில் நிகழ வேண்டுமென கூறப்படுகிறது. ஆனால், அனைத்து வேளைகளிலும் பேச்சுவார்த்தைக்குச் செல்லும் அவை வரையறை செய்யக் கூடாதெனவும், முதலில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டுமென்றும் கூறினார்கள். ஆனால், இறுதியாக நிகழ்ந்தது பேச்சுவார்த்தை உடைந்து விழுந்ததே.

இது போன்ற வினாக்கொத்தை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களுக்கமைய முன் ஆயத்தத்துடன் பேச்சுக்குச் செல்ல முடியும். இரு தரப்பும் சந்தேகமின்றிச் சம்பந்தப்பட்ட பேச்சை முன்னெடுக்க இடவசதியுண்டு. அதிகாரத்தை பங்கிடும் நோக்கில் பயணிப்பதாயின் அது நிகழ வேண்டியது எவ்வாறு?

இது தொடர்பாக பல பேரின் உடன்பாடு உள்ளபோதும், அந்தக் கட்டமைப்புக் குறித்து இதுவரை எவருமே கருத்தை முன்வைக்க வில்லை. அதிகாரத்தைப் பகிரும் போது முதலில் அவதானம் சேர்க்க வேண்டியுள்ளது. அவை விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளே. அதிலொன்று - சுயநிர்ணய உரிமை, இரண்டாவது - மரபு வழித்தாயகத்தை ஏற்றுக் கொள்ளுதல், மூன்றாவது- தமிழ் மக்களது உரிமைகள், நான்காவது - தமிழ் மக்களை வேறான மக்கள் குழுவாக ஏற்றுக் கொள்ளுதல் என்பனவாகும்.



இதில் பாரதூரமான விடயங்களாக முதலாவது மற்றும் இரண்டாவதைக் கொள்ளலாம். அடுத்த இரண்டு கோரிக்கைகளை முதலிரண்டையும் பாதுகாப்பதற்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் ஏதாவதொரு மக்கள் குழுவிலிருந்தும் வேறுபடுத்தி கவனிக்கப்படுவதாக சர்வதேச சமூகத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு இயலுமென விடுதலைப் புலிகள் நினைக்கின்றனர்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பதை தெளிவாக்கி கொள்ளவேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் போது சுயாதீனமாக நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமை என்பது இதன் எண்ணமாகும். அதிகாரத்தைப் பகிர்வதன் மூலம் சுயநிர்ணய உரிமையை வழங்குவதாயின் இதனை பிரிவுகளாக வகைப்படுத்த முடியும்.

அரசாங்கத்தை கேட்காமல் தீர்மானங்கள் எடுத்துச் செயற்படுதல் முதலாவது. இதில் இரண்டு உப பிரிவுகள் உள்ளன. இதில் முதலாவது - தீர்மானமெடுத்து நடவடிக்கை மேற்கொள்வதாக அரசுக்குத் தெரிவிப்பது மற்றும் அரசுக்குத் தெரிவிக்காத விடயங்கள்.

இரண்டாவது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கான அனுமதியை சமர்ப்பிப்பது. இந்தச் சந்தர்ப்பங்களின் போது சுயநிர்ணய உரிமையின் அதிகாரம் மட்டுப்படுத்தப்படும். அப்படி அனுமதி எடுக்கப்படாத விடயங்கள் கலந்துரையாடப்பட்டு, தீர்மானிக்கப்பட வேண்டும். இந்த விதமாக செயற்படுவது தன்னாட்சி அதிகாரம் எனவும் அறிமுகப்படுத்தலாம்.

எவ்வாறாயினும், நாட்டைப் பிரிக்காமல் அதிகாரத்தைப் பகிர்வதை எதிர்பார்ப்பதாயின் அரச பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார நடவடிக்கைகளோடு தொடர்புபட்டவற்றை அரசுடன் வைத்துக் கொள்ளவேண்டும். இதன் போது ஒரேநாடு, இரண்டு முறைகள் எனும் எண்ணக் கருவை பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

பிரிட்டன், கொங்கொங்கை சீனாவிடம் பாரம் கொடுக்கும்போது - வெஸ்ட் மினிஸ்ரர் முறையான நிர்வாக அலகு இருந்தது. அந்த முறையை விலக்கி விட்டு சீனாவின் பகுதியாக நிர்வகிப்பதற்கு சீனா முயற்சித்தது. இறுதியில் அரசியலமைப்பு எனும் சிக்கலுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அதன் போது ஒருநாடு அரசியலமைப்பு இரண்டு என்ற கருத்துக்கு வந்தார்கள். இதில் முக்கிய விடயமாக அமைவது பூமியைப் பங்கிடாது, மக்களை முதன்மைப் படுத்தி அதிகாரத்தைப் பகிர்வதன் மூலம் சிக்கல் தீர்வது.

இவ்வாறான தீர்வின் போது பாதுகாப்பு நடவடிக்கைகள் மறுசீரமைக்கப்படுவது, மீண்டும் நிறுவனப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் அரசியல் ரீதியில் அரசியலமைப்பு மாற்றமும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழில் - நாடோடி

# முக்கிய பிரச்சினைகளில் அரசை ஆதரிக்கமாட்டோம்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

கொழும்பு ———

முக்கிய பிரச்சினைகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை இனி ஆதரிக்க மாட்டோம் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தக்கட்சியின் பிரதம கொறடா ஜோசப்மைக்கல் பெரேரோ கூறியதாவது -

அலரி மாளிகையில் அமைதி முயற்சிகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்த வருமாறு நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், அதற்கு அரை மணிநேரத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் சுசந்த புஞ்சிநிலமேயை பிரதி அமைச்சராக்கினார் மகிந்த ராஜபக்ஷ. அவர் பதவியேற்பது தொடர்பாக ரணிலுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பல்வேறு பிரச்சினைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைக்கேட்டுக் கொண்டே ஐக்கிய தேசியக்கட்சியை அழிக்கப்பார்க்கிறது அரசாங்கம்.

இந்த இரட்டை வேடத்தை நாம் ஒப்புக் கொள்ளமுடியாது. இது குறிந்து நாங்கள் விவாதித்தோம். இனி அரசாங்கத்துக்கு எந்த ஒரு பிரச்சினையிலும் ஆதரவு அளிப்பதில்லை என்று முடிவு செய்துவிட்டோம் எனத் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க -

அதிகரித்து வரும் மக்களின் வாழ்க்கைச் செலவீனத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. பணவீக்க விகிதம் 9 வீதத்திலிருந்து 17 வீதமாக அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவீனம் மிகவும் அதிகரித்துவிட்டது.

நாட்டின் பொருளாதாரத்தையும், அபிவிருத்தியையும் மறுசீரமைக்க அரசாங்கத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ கூறியதாவது-

அமைதி முயற்சிகளைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவைத் துரோகி என்று கூறிவிட்டு இப்போது அவரிடம் அமைதி முயற்சிக்கான யோசனைகளை அரசாங்கம் கோருகிறது.

இராணுவத்தின் மூன்றாம் நிலை தளபதியான பரமி குலதுங்கவுக்கும் உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்கவில்லை.

சரத் பொன்சேகா மீதான தாக்குதல் மற்றும் கெப்பிற்றிக்கொல்லாவ சம்பவத்துக்குப்பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்கம் - பரமி குலதுங்க கொலைக்குப்பின்னர் மேற்கொள்ளவில்லை. அரசாங்கம் ஏன் இத்தகைய நிலைப்பாட்டை மேற்கொண்டது என அவர் கேள்வியெழுப்பினார்.

# ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தமிழகம் தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும்

## தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவிப்பு

சென்னை

ஈழத்தமிழ் மக்களின் விடுதலையை சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கான சூழல் ஏற்படும் வரை விடுதலைக்காக நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு தமிழ்நாடு தொடர்ந்தும் உறுதுணையாக இருந்து செயல்படும் என தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இந்தியா விஜயம் செய்தவேளை தமிழ்நாட்டிலுள்ள முக்கிய அரசியல் தலைவர்களையும், புத்திஜீவிகளையும், தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும் சந்தித்து இன்றைய நிலையில் இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி மிகவும் விரிவாக விளக்கிக் கூறினார்.

தமிழக முதலமைச்சர் கருணாநிதியை தி.மு.க. தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஈழத் தமிழர்களின் துயர் துடைக்க உதவுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதன் பின்னர் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவை சந்தித்து இந்திய அரசாங்கம் இலங்கைக்கு எந்தவிதமான இராணுவ உதவிகளையும் வழங்கக்கூடாது என்றும், தொடர்ச்சியாக ஈழத்தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருவதற்கு நன்றியும் தெரிவித்தார். ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் தொடர்ந்து ம.தி.மு.க உறுதியாகச் செயல்படும் என இந்தச் சந்திப்பில் வைகோ தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனை சந்தித்து ஈழத் தமிழர் போராட்டத்துக்கான முழு ஆதரவையும் தமிழகத்தில் வழங்கி நெறிப்படுத்தி வருவதற்காக ஈழத் தமிழர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்தார்.

பா.ம.க நிறுவுனர் டொக்டர் ராமதாஸை சந்தித்தவேளை ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்ற பா.ம.க தொடர்ந்து குரல் கொடுக்கும் என்று டொக்டர் ராமதாஸ் தெரிவித்தார். இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகள் செய்யக்கூடாது என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாக அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பு பொங்குதமிழ் அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெற்றது.

பா.ம.க தலைவர் ஜி.கே.மணியை அவரது இல்லத்தில் சந்தித்து ஈழத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவனை கட்சியின் தலைமைச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் கே.கிருஷ்ணசாமியை காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினார். இதில் ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய மாநில அரசுகள் ஆதரவாகச் செயல்படக்கூடிய நிலைமையை உருவாக்குவதில் உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஈழத் தமிழர்களை காப்பாற்றும் முயற்சியில் காங்கிரஸ் உறுதியாகச் செயல்படும் என கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

பா.ஜ.கவின் துணைத் தலைவர் இல.கணேசனை தமிழ்நாடு தலைமைச் செயலகமான கமலாயத்தில் வைத்து சந்தித்தார்.

இதேவேளை, திராவிட கழகத் தலைவர் சி.வீரமணி இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலர் என்.வரதராஜன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் தா.பாண்டியன் தே.மு.தி.கழகத்தின் தலைவர் நடிகர் விஜயகாந் நக்கீரன் ஆசிரியர் கோபால் ஆகியோரையும் சந்தித்தார்.

பழ.நெடுமாறன் ஏற்பாடு செய்த கூட்டத்திலும் கலந்து கொண்டு நடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கலந்து கொண்டு பேராசிரியர்கள் புத்திஜீவிகள் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் ஆகியோருக்கும் ஈழத்தமிழரின் இன்றைய நிலை பற்றியும் எடுத்துக்கூறினார். தொப்புள்கொடி உறவான தமிழக மக்கள் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற உரத்துக் குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை தலைவர் சி.கதிர்காமத் தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு சங்கப் பணிமனையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## மாலிசந்தி பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம்

நெல்லியடி

அல்வாய் - மாலுசந்திப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்தில் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (12)

# பாலியல் வல்லுறவு சந்தேகநபரை நிரபராதியாக நீதிமன்றம் விடுதலை!

வடமராட்சி

பருத்தித்துறை - தும்பளையில் இளம் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட நபர் - பாலியல் வல்லுறவுக் குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறியமையால் அவரை யாழ். மேல்நீதிமன்றம் விடுதலை செய்தது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பருத்தித்துறை - தும்பளையில் இளம்பெண் ஒருவரைக் கற்பழித்ததாக குற்றம்சாட்டப்பட்ட பு.ஜெகநாதன் என்பவருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி செ.தியாகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணைகளின் முடிவில் வழக்கு தொடர்பான எல்லா சாட்சியங்களையும் ஒப்புநோக்கிய நீதிபதி அவற்றில் காணப்பட்ட முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டியதுடன் - எதிரி முறைப்பாட்டாளரின் விருப்பத்துக்கும். சம்மதத்துக்கும் மாறாக பலாத்காரம் செய்தார் என்பதை நியாயமாக சந்தேகத்துக்கப்பால் நிரூபிக்க அரச வழக்குதொடுனர் தரப்பினர் தவறியுள்ளனர் எனத் தெரிவித்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்தனர்.

இந்த வழக்கில் அரசதரப்பில் அரச சட்டத்தரணி டி.எஸ்.சூசைதாசனும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் சட்டத்தரணி எஸ்.சிவநேசனும் ஆஜராகியிருந்தனர்.

# முகமூடி அணிந்த நபர்கள் ஆயுத முனையில் கொள்ளை!

## கோம்பயன்மணல் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்

யாழ் நகரக்கு அணமையில் கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றினுள் நேற்று நள்ளிரவு வேளை புகுந்த இனந்தெரியாத ஆயுதக் குழுவினர் துப்பாக்கி முனையில் மிரட்டி விட்டு வீட்டிலிருந்த பொருட்களை அபகரித்துச் சென்றனர்.

நள்ளிரவு வேளை வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே நுழைந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டில் இருந்தவர்களை, படுக்கையிலிருந்து எழும்பவேண்டாம் என்றும், எழும்பினால் சுடுவோம் என்று மிரட்டி விட்டு வீட்டிலிருந்த பொருட்களை அவர்கள் வந்த ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு தப்பிச் சென்று விட்டனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தின் போது 15 பவுண் நகை, 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் வீட்டில் இருந்த அனைத்து பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சிங்கள மொழியில் சரளமாகப் பேசிய பத்துக்கு மேற்பட்டோரைக் கொண்ட இந்த ஆயுதக் குழுவினர் கைத்துப்பாக்கி மற்றும் கத்தி, வாள், குண்டாந்தடி என்பனவற்றை வைத்திருந்ததாகவும் - சுமார் ஒரு மணித்தியாலம் வீட்டிலிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் நேற்று மாலை வரை பொலிஸார் வீட்டுக்குச் சென்று பார்வையிடவில்லை எனத் தெரியவருகிறது.

இந்த கொள்ளைச் சமபவத்தில் ஈடுபட்ட நபர்கள் பொருட்களை ஏற்றிக் கொண்டு பிரதான வீதி வழியாக யாழ். நகர் நோக்கி சென்றதாக தெரிவிக்கப்படுறது.

## பண்பாட்டியல் முதுகலைமாணி பட்டப்படிப்பாளர்களுக்கு

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 2002 ஆம் ஆண்டில் பண்பாட்டியல் முதுகலைமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டு இதுவரை பட்டத்தை பூர்த்தி செய்யாதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள சேர். பொன் இராமநாதன் உருவச்சிலை அருகில் நடைபெறவுள்ளது.

# மத்திய கிழக்கில் பணிபுரிவோருக்கு வீட்டுக் கடன் திட்டம் அறிமுகம்!

## கோப்பாய் பிரதேச செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று பணிபுரிவோருக்கு வீட்டுக்கடன் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

வீட்டுக்கடன் பெற விரும்புவோர் தங்களது விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன்திட்டத்துக்கு பதிவுசெய்ய வருவோர் கடவுச்சீட்டு இலக்கம், வங்கி கணக்குப் புத்தகம் மற்றும் வெளிநாட்டுக்குச் சென்ற திகதி என்பவற்றைக் கொண்டு வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

# சிசுவை நெரித்துக் கொலை செய்த பெண்ணுக்கு 5 வருட கடூழியச் சிறை!

## யாழ். நீதிமன்ற நீதிபதி உத்தரவு

யாழ்ப்பாணம்

வடமராட்சி - அல்வாய் கிழக்கில் பிரசவித்த குழந்தையை உடன் நெரித்துக் கொலை செய்த பெண்ணுக்கும், அதற்கு உடந்தையாக இருந்த தாய்க்கும் யாழ். மேல்நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வடமராட்சி - அல்வாய் கிழக்கில் பிரசவித்த குழந்தையை உடனே நெரித்துக் கொலை செய்து காணிக்குள் புதைத்ததாகத் தெரிவித்து அல்வாய் கிழக்கைச் சேர்ந்த மகளுக்கும், அதற்கு உடந்தையாகவிருந்த தாய்க்கும் எதிராக நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இந்த இருவரையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதிவான் முதலாவது குற்றவாளிக்கு முதலாம் குற்றச்சாட்டுக்கு 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து - அபராதம் செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 2 ஆம் குற்றச்சாட்டுக்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும், 25 ஆயிரம் ரூபா அபராதமும் - அபராதம் செலுத்தத் தவறின் 6 மாதகால கடூழியச் சிறைத்தண்டனையும் -

2 ஆவது குற்றவாளிக்கு 6 மாதகால சிறைத்தண்டனையும், 25 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்திருந்தார்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேற்படி இருவரும் யாழ். மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர்.

இந்த மேன்முறையீட்டு விசாரணைகள் மேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நடைபெற்றபோது - 1 ஆம் குற்றச்சாட்டிலிருந்து முதலாவது குற்றவாளியை விடுவித்த நீதிபதி ஏனைய குற்றச்சாட்டுக்களுக்காக 5 வருடாங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும், 5 ஆயிரம் ரூபா அபராதமும் - அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் மேலும் 6 மாதகால சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்ததுடன் -

2 ஆவது குற்றவாளிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதகால கடூழியச் சிறைத்தண்டனையும், 5 ஆயிரம் ரூபா அபராதமும் - அபராதத்தைச் செலுத்தத் தவறின் 6 மாதகால சிறைத்தண்டனையையும் விதித்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் அரச தரப்பில் அரச சட்டத்தரணி டி.எஸ்.சூசைதாசனும், குற்றவாளிகள் சார்பில் சட்டத்தரணி எஸ்.சிவனேசனும் ஆஜராகியிருந்தனர்.

# சிறுபோக வெங்காய செய்கை; விவசாயிகள் ஆர்வமின்மை

வடமராட்சி

வடமராட்சிப் பகுதியில் சிறுபோக வெங்காயச் செய்கை மிகக் குறைந்தளவிலே செய்கை பண்ணப்பட்டு வருகிறது

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் அச்சமடைந்த விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதை தவிர்த்து வருகின்றனர்.

அத்துடன் மண்ணெண்ணைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு என்பவையே வெங்காய செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை என விவசாயி ஒருவர் தெரிவித்தார். நாட்டில் இவ்வாறான போர்ச் சூழல் நீடிக்குமாயின் பெரும்போக பயிர்ச்செய்கையும் பாதிக்கப்படும் எனத் தெரியவருகிறது.




அருள் சுரக்கும் நயினைதாயே

அலைகடலின் நடுவினிலே
அன்பர் கூட்டத்தின் மையத்திலே
அரவம் குடைபிடிக்க கீழ் அமர்ந்து
அருள்சுரக்கும் அன்னையவள்
அடியாரின் குறை தீர்த்தருள
அனுதினமும் வீதிவலம் வருவாயம்மா!

இ.தனா

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணிக்கு கமல், ரஜனிக்கும் அழைப்பு

சென்னை—

இன்று சென்னையில் நடைபெறவுள்ள ஈழத்தமிழர்கள் பாதுகாப்பு பேரணியில் கமல்,ரஜனி உள்ளிட்ட திரையுலகத்தினரும் திரண்டுவந்து ஆதரவளிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளரிடம் பேசும்போது-

ஈழத்தமிழர்களை பாதுகாக்க அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் மனிதநேய பேரணி மற்றும் பொதுக்கூட்டம் சென்னையில் இன்று நடைபெறவுள்ளது.

பேரணி மன்றோ சிலையில் இருந்து புறப்பட்டு பெரியார், அண்ணா சிலை வழியாக சேப்பாக்கத்தில் முடிவடையும். பின்னர் மயிலை மாங்கொல்லையில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பழ.நெடுமாறன், மதுரை ஆதீனம் டொக்டர் சேதுராமன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று பேசவுள்ளனர்.

கலை உலகத்தினரும் இந்தப் பேரணி பொதுக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று விரும்புகிறோம். ரஜினிகாந்த், கமலஹாசன், விஜயகாந்த், சத்தியராஜ், விஜய், எஸ்.ஏ. சந்திரசேகரன், மணிவண்ணன், பாரதிராஜா, ஆகியோரை பேரணிக்கு அழைப்பதற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். ஆனால், அவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர் என்றும் முக்கிய வேலையாக இருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டதால் பேச முடியவில்லை.

ரஜினி, கமல் உள்ளிட்ட நடிகர்கள் ஈழத்தமிழர் பாதுகாப்பு பேரணியில் பங்கேற்று தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறேன்.

இந்திய அரசு தமிழர்களுக்கு ஆதரவாக தலையிட வேண்டும். சிங்களவர்களுக்கு எந்த வகையிலும் உதவக்கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்திநடக்கும் இந்தப் பேரணிப் பொதுக்கூட்டத்தில் திரையுலகினர், தமிழ் அறிஞர்கள் பங்கேற்க வேண்டும்.

கடந்த 5 , 6 மாதங்களில் 4000 பேர் அகதிகளாக வந்துள்ளனர். ஈழத்தில் அறிவிக்கப்படாத யுத்தத்தை சிங்கள அரசு நடத்துகிறது. எனவே, தமிழர்களை காப்பாற்ற இந்திய அரசு தலையிடவேண்டும் என்பதே இந்தப் பேரணி பொதுக்கூட்டத்தின் நோக்கமென அவர் தெரிவித்தார்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிமீது அம்பாறையில் ஷெல் தாக்குதல்!

அம்பாறை—

அம்பாறையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள்மீது நேற்றுப் பகல் விசேட அதிரடிப்படையினரால் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்றுக்காலை 11.45 மணியளவில் துணை இராணுவக் குழுவினர் முன்நகர்ந்து சூனியப் பிரதேசத்தில் தாக்குதலுக்குத் தயாராக நின்றனர்.

விடுதலைப்புலிகள் எந்தவித தாக்குதலும் நடத்தாதவேளை காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமிலிருந்து பாவட்டாப் பிரதேசம் நோக்கியும், தாண்டியடிப்படை முகாமிலிருந்து தங்கவேலாயுதபுரம் மக்கள் குடியிருப்புக்களை நோக்கியும் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இந்தத்தாக்குதலில் பொதுமகன் ஒருவரின் வீடு சேதமடைந்தது.

இதனிடையே அம்பாறை மாவட்ட அரசியல்துறையினரை அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு பாவட்டா மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் அம்பாறை மாவட்ட படையணிப் பொறுப்பாளர் மதுரகவி, உடும்பன்குளம் அரசியல் துறைப் பொறுப்பாளர் வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

படையினரால் நேற்று முற்பகல் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள் தொடர்பாகவும் மற்றும் மாவட்டத்தின் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு இந்தச் சந்திப்பின்போது எடுத்துக்கூறப்பட்டது.

## மோட்டார்...

இதேவேளை, நேற்றுக்மாலை மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டபோதும் தாம் பதில் தாக்குதலை நடத்தவில்லை என படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

## அரசாங்கம்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் , பாதுகாப்பு செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்போவதாக வெளியான செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

இந்தச் செய்தியை திருத்துமாறும், இதைவிடுத்து மிகவும் பொறுப்புடன் செயற்படுமாறும் இந்த அறிக்கைமூலம் அரசு கேட்டுக்கொள்கிறது. அண்மைக் காலங்களில் சில ஊடகங்களில் இது போன்ற உண்மைக்குப் புறம்பான,பொய்யான செய்திகள் வெளியாகியுள்ளன. இது போன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளின் மூலம் அரசையும், நிர்வாகத்தையும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவதற்கேயென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துணை...

இவர்களுக்கு இராணுவ மற்றும் புலனாய்வுத்துறையினரின் தயவில் இராணுவப்பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

வாழைச்சேனை, கிரான், சந்திவெளி, பேத்தாளை, விநாயகபுரம், கண்ணகிபுரம், பட்டியடிச்சேனை, கல்குடா போன்ற கிராமங்களிலிருந்து சிறார்கள் மிரட்டப்பட்டு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இதற்கு இராணுவத்தினரும் நேரடியாக உதவி செய்துள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி யுனிசெப் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் துணை இராணுவக் குழுவான கருணா குழுவால் கடத்திச் செல்லப்பட்டு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்படும் சிறார்களை உடனே விடுவிக்க முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இருப்பினும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் கருணா குழுவினரின் அடாவடித்தனமான அட்டூழியங்களும், கொலை மிரட்டல்களும், கடத்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

## உடன்...

மாற்றி அமைக்கப்படவேண்டுமானால் இரு தரப்பினரதும் உடன் படல் வேண்டும்.

விடுதலைப்புலிகள் தமது கருத்துக்களில் மாற்றம் இல்லையென கூறி வருகின்றனர். இது குறித்து அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

தாம் ஐரோப்பிய பணியாளர்கள் என்பதை மறந்து கண்காணிப் பாளர்கள் என்ற நிலையிலேயே செயற்பட்டு வருவதாகவும், இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையை சமாளிப்பதற்கு அதிகளவு சவால்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னாரில்...

இதேவேளை, வவுனியா - பூந்தோட்டத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் பொலிஸாரை இலக்கு வைத்து வீசப்பட்ட கிரனேட் குளம் ஒன்றுக்குள் விழுந்து வெடித்தது. இந்தச் சம்பவத்திலும் எவ்வித தேமும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது.

# தெற்காசிய விளையாட்டு; திட்டமிட்டபடி இலங்கையில் நடைபெறும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு—

ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை - ஏற்கனவே திட்டமிட்டபடி தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டி இலங்கையில் நடைபெறும் என்றும் ,

இதற்கு விசேட இராணுவ மற்றும் பொலிஸ்பிரிவுகள் பாதுகாப்பு வழங்கும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தகவல் திணைக்களத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க கருத்துத் தெரிவிக்கும் போது,

தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப்போட்டி இந்தமுறை இலங்கையில் நடைபெறவுள்ளது.எமது நாட்டுக்கு இந்தச்சந்தர்ப்பம் 15 வருடங்களின் பின்னர் கிடைத்துள்ளது. ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தப்போட்டியில் 2500 வீர,வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப்போட்டியில் இந்தியா 400, பாகிஸ்தான் 350 ,பங்களாதேஷ் 300, ஆப்கானிஸ்தான் 120 என்ற அடிப்படையில் வீர,வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தப்போட்டிகள் நடைபெறுவதற்கான விளையாட்டு மைதானங்களுக்கான ஏற்பாட்டு வேலைகள் யாவும் இந்தமாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இந்தப்போட்டிகள் யாவும் சுகததாச விளையாட்டரங்கு உட்பட மேலும் 8 விளையாட்டு மைதானங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிக்கு அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் அனுசரணை வழங்கவுள்ளன. இந்தப்போட்டிக்கான பூரண பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக விசேட பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இலங்கை விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு விசேட உடைகள் இந்தப்போட்டியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், இதன் பின்னர் வரும் சகல போட்டிகளிலும் அவர்கள் இந்த உடைகளை அணிவார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க உத்தரவு!

திருகோணமலை—

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சபையில் கடமையாற்றும் தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களை நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம உத்தரவிட்டுளார்.

2002 ஆம் ஆண்டு புதிய ஊழியர்களை நிரந்தர சேவையில் இணைப்பதைத் தடைசெய்த சுற்றுநிருபம் சம்பந்தமாக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சரோடு இடம் பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்த நியமனங்கள் நிரந்தமாக்கப்படவுள்ளன.

இதனால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமைபுரியும் தற்காலிக, ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் நன்மை பெறவுள்ளனர்.

## விசேட...

உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் இந்தப் பிரதேசத்தில் விநியோகிக்கப்பட்டது. இந்தத் திட்டம் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே இந்தத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்த விசேட திட்டத்தின் கீழ் திரட்டப்படும் விபரங்கள் ஜனாதிபதி செயலகத்தில் சேகரிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

## பிரதிப்...

நியமனங்களும் மேற்கொள்ளப்படும் நிலையில் கூட்டுப்படைகளின் தளபதியாக கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட நியமிக்கப்படலாம் என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிப்பதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## புலிகளை...

ஆனால், இதை கோபாலபுரத்து சூத்திரதாரி திரித்து, விடுதலைப் புலிகளைச் சந்திக்கச் சென்றதாகச் செய்திகளைப் பரப்புகிறார்கள். நான் ஏன் ரகசியமாக விடுதலைப் புலிகளைச் சந்திக்கவேண்டும்?

புலிகளையோ, அவர்களின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தையோ சந்திக்கவேண்டுமென்றால், ரகசியமாகச் சந்திக்கவேண்டிய அவசியமில்லை. வெளிப்படையாக, பகிரங்கமாகவே சென்று சந்திப்பேன். ஈழத் தமிழர்களுக்காக ம.தி.மு.க என்றும் குரல் கொடுக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## குடும்பஸ்தர்...

சுட்டுக்கொன்றதாகத் தெரிய வருகிறது.

மரணமானவர் 41 வயதான மொகமட் துவான் அலி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் இராணுவ உளவாளியாக செயற்பட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## பணிநிலை வெற்றிடம்

**1. உதவி ஆசிரியர் -**
(செய்திப் பத்திரிகை ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

**2. அலுவலக செய்தியாளர்கள் - (பயிலுனர்)**
பத்திரிகைத்துறையில் ஆர்வமுடைய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**3. ஒப்புநோக்குநர் -**
க.பொ.த சாதாரணதரத்தில் தமிழில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன், க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

பணிநிலை வெற்றிடம்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-நிர்வாக இயக்குநர்.



UNIT பிரத்தியேகப்படுத்துகின்றது
Hardware Networking
வேகப் பயிற்சி நெறி (பாடத்திட்டம் மாற்றமில்லாமல்)
Just Rs. 1000/- Only
2 வாரத்தில் ஒரு முழுமையான தொழிற்பயிற்சி
Just Rs. 1500/- Only
நீங்கள் எம்முடைய குறுகிய காலப் பயிற்சியில் இணைவதன்மூலம்
❖ பெருமிதம் கொள்ளவைக்கும் திறனாய்வுகள், ஒத்துப்பார்த்தல், திருத்துதல்.
❖ 100% Practical experience ❖ World's accrediated Certificate
❖ UNITக்கென்றே பிரத்தியேகப்படுத்தப்பட்ட பாடநெறி
❖ தன்னிச்சையான கணினிக் கையாளலுக்கான 100% உத்தரவாதம்
❖ இப்போது எல்லோரும் எங்கள் வழியை பின்பற்றுமளவிற்கு முன்னணிப் போக்கு.
❖ உலகத்தரம் வாய்ந்த கல்வியை தொடர இலகு நுழைவாயில்.
இன்னும் பல...
50% சலுகை
இலவச பயிற்சிக் கோவை மற்றும் பல
எங்கள் தகைமைகள்
இந்திய பொறியியல் துறையில் சிறப்புத் தேர்ச்சி மற்றும் 2 தசாப்த கால இந்திய கணினித்துறை பட்டறிவு பெற்ற விரிவுரையாளர்
தாயக மண்ணில் பிரத்தியேகமாக Hardware & Networking ற்காக அமைக்கப்பட்ட ஆய்வுகூடம்
பயிற்சிக்குப் பிந்திய உதவிகளாக (புதிய தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்பு ஒழுங்கமைப்பு)
வெற்றி என்பதை சுவிகரித்தவர்கள்
For Complete Technology
(8-5447)
UNIT Education
16/1, Killnar Lane,
K.K.S. Road, Jaffna.
பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை
021 4590720
Rush to Join
Limited seats Only
Near Jaffna Hindu College
Next Batch 10.07.2006


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.